# சங்கதி

(ஆடி - மார்கழி - 2007)

கௌரவ ஆசிரியர்:
**என். மணிவாசகன். ஜே.பி.**

"மகாசக்தி" வெளியீடு - அக்கரைப்பற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுமலர்ச்சி சனசமூக நிலையம்
பொது நூலகம்
பதிவு இல.
034

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கதி

(ஆடி - 2007 - மார்கழி - 2007)

ஆசிரியர்

என். மணிவாசகன்

வெளியீடு

மகாசக்தி - அக்கரைப்பற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குதூகலிப்போம்

ஓயட்டும் குண்டுமாரி மரண
ஓலங்கள் அவலமெல்லாம்
பாயட்டும் அமைதியென்ற
ஒளியிந்த நாட்டிலெங்கும்
மாயட்டும் பகைமைதீமை
மதியீனம் பாதங்கள்
வாய்க்கட்டும் சமாதானம்
கொண்டாடிக் குதூகலிப்போம்!

~ மணிக்கவிராயர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கதிக்கு
## உள்ளே...

1. குதூகலிப்போம்
2. சங்கதிக்குள்ளே
3. மூட நம்பிக்கை
4. மொன்டிசோரி முறை
5. மூளைக்கு ஒரு முஸ்பாத்தி
6. படித்துப்பயன் பெறும்...
7. சிறுவர் கல்வி - கட்டாயக்கல்வி
8. சந்தோசம்
9. கூட்டுறவு விழாவிலே...
10. கூட்டுறவில் காண்போம் 'சமாதானம்'
11. ஆலையடிவேம்பு கூட்டுறவு விழாவிலே...
12. சமரச நோக்கு
13. ஆசாமிகளே போதும் (கவிதை)
14. மாற்றங்களை நோக்கிய பயணத்தில்..
15. நடந்த சங்கதிகள்
16. இணையத்தின் தகவல் துளிகள்
17. விவசாய அபிவிருத்திச் சேவை
18. கூடி வாழ்தல் (கவிதை)
19. வோட்டும் வேட்டும் (கவிதை)
20. தேசத்தை விட்டு மறைவேன் (கவிதை)
21. பேரூந்துகளில் புகைத்தல்...
22. மனித உரிமை (கவிதை)
23. கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சேமிப்புத் திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. ஒரு இடம்பெயர்வுச் சங்கதி

25. குடியிருக்க வேண்டாம்

26. கூட்டுறவு பேச்சளவில்

27. மணி வாக்குகள்

28. சிங்கள இனமே (கவிதை)

29. தெரியுமா தூரம்.....

30. தேடிவந்த கவித்துளிகள்

31. Let us Sing Little Songs

32. 'சம்மா சக்தி' சுயதொழில் கடனுதவிகள்....

33. பரவாயில்லை (கவிதை)

34. இலங்கையின் முக்கியங்கள்

35. அடுத்த சங்கதியில்......

36. 'மகாசக்தி' வழங்கிய கடனுதவிகள்

37. அடுத்த சங்கதியில்....

38. மணிமேடையில்.....

39. நிழல்படங்கள்.....

## *Vision of Action*

*"Vision without action is merely a dream. Action without vision is just passes time. But vision with action can change the world.*

**"Joel Axther Barker"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் அதிகாரத்தில்

**பத்துகளில் ஒன்று**

உலகம் போற்றும் "திருக்குறள்" 133 அதிகாரங்களைக் கொண்டது. மொத்தம் 1330 குறட்பாக்களை தன்னகத்தே கொண்டது. தேனினும் இனியது திருக்குறள். எம்மதத்தவரும் எடுத்தாளக்கூடிய தீர்க்க தரிசனமான கருத்துக்களை, வியக்கத்தக்க வகையில் எழுதி, ஒரு பொது மறையாக உலகுக்கு வழங்கியவர் தெய்வப்புலவர் திருவள்ளுவப் பெருமான். இது பற்றி நத்தத்தனார் எனும் புலவர் இவ்வாறு கூறுகின்றார்.

> **"ஆயிரத்து முன்னூற்று முப்ப தருங்குறளும்**
> **பாயிரத்தினோடு பகர்ந்தபின் - போயொருத்தர்**
> **வாய்க்கேட்க நூலுளவோ மன்னுதமிழ்ப்புலவ**
> **ராய்க் கேட்க வீற்றிருக்கலாம்"**

மற்றொரு புலவர் இடைக்காடர், 'கடுகைத்துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத்தறித்த குறள்' என்று வியக்க அடுத்தொரு புலவராம் ஔவையார் "அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுகத்தறித்த தெய்வீகத் குறளும், தமிழுக்கு கிடைத்தமை தமிழ்த்தாய்க்கு கிடைத்த பெரும் பாக்கியமேயாகும் என்று வியந்து பகர்ந்துள்ளார்.

இத்தகைய பெருமைமிக்க திருக்குறள் 1330யும் நாம் அறிந்திருக்காது விட்டாலும், குறைந்தது 130 குறள்களையாவது நாம் அறிந்து வைத்திருப்பது எமது! சாதாரண அறிவுக்கு ஞான ஒளியைப் பாய்ச்சுவது போன்றதாகும்! அல்லவா!

ஆகவே ஒவ்வொரு அதிகாரத்திலுமிருந்து ஒவ்வொரு குறளைத் தேர்ந்து கருத்தறிந்து, சுவையறிந்து உங்கள் நாளாந்த தேவைக்காக இங்கு "பத்தில் ஒன்று" (அதாவது ஒரு அதிகாரத்தில் வரும் 10 குறள்களில் ஒன்று) எனும் மகுடத்தின் கீழ் தரப்படுகின்றது.
இம்முயற்சி உங்களது பேச்சாற்றலையும் வளர்க்க பேருதவியாக இருக்கும் என்பதை மறவாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி முதலாவது 'பத்தை'ப் பாருங்கள், படியுங்கள்! மனனம் செய்யுங்கள்! மிக முக்கியமான சங்கதி - உங்கள் வீட்டில் கட்டாயம் ஒரு திருக்குறள் நூல் இருக்கவேண்டும் என்பதே!

## பத்துகளில் ஒன்று

01. "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" (கடவுள் வாழ்த்து)

02. "துப்பார்க்கு துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை" (வான் சிறப்பு)

03. "செயற்கரிய செய்வார் பெரியர் - சிறியர்
செயற்கரிய செய்கலா தார்" (நீத்தார் பெருமை)

04. "அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்" (அறன் வலியுறுத்தல்)

05. "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" (இல்வாழ்க்கை)

06. "தற்காத்துக் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்" (வாழ்க்கை துணைநலம்)

07. "குழல்இனிது யாழ்இனிது என்பர்தம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்" (மக்கட் பேறு)

08. "அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு" (அன்புடைமை)

09. "இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு" (விருந்தோம்பல்)

10. "இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" (இனியவை கூறல்)

மாணவ-மாணவிகள் - முழு மூச்சாக இவற்றை மனனம் செய்வதோடு கருத்தறிந்து பொருளறிந்து மேடைகள் தோறும் பேசவேண்டும். இளைய சமுதாயத்தின் சிந்தனா சக்தியை வளர்க்க கற்றறிந்த பெரியோர்கள் - கல்விமான்கள் அர்ப்பணிப்புடன் பாடுபட முன்வர வேண்டும்.

(ஆ+ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூடநம்பிக்கைகள்
## (SUPERSTITIONS)

சாலையிலே சென்று கொண்டிருக்கும் பூனை குறுக்கே ஓடினால் காரியம் சாத்தியப்படாது என்று சிலர் நம்புகிறார்கள்...

எவரேனும் தும்மினால் அதை தீமைக்கான அறிகுறியாக அல்லது அபசகுனமாகக் கொள்கிறார்கள் சிலர்!...

நல்ல மங்களகரமான காரியத்துக்குச் செல்லும்போது கைம்பெண் கண்ணில் பட்டால் அபசகுனம் என்றும், காரியம் துயரத்தில் முடியும் என்றும் சிலர் தவிர்த்து நடக்கிறார்கள்...

மேனாடுகளில் பலர் 13 என்ற எண் தீமை பயக்கும் என நம்புகின்றனர். பொதுவாக அங்குள்ள வீடுகளில் 13 என்ற எண் இருக்காது. 12ம் எண்ணுள்ள வீட்டுக்கு அடுத்த வீட்டை 12 - A என்று குறித்து விட்டு, அதற்கு அடுத்த வீட்டை 14 என்று குறிப்பிடுவார்கள்.

மிகப் பழங்காலத்திலிருந்தே மூடநம்பிக்கைகள் இருந்து வருகின்றன. பேய், பிசாசு, பூதம் முதலியவை இருப்பதாக பழங்கால மக்கள் பெரிதும் நம்பினார்கள். இன்றும் அதற்காக மந்திரங்கள் சொல்லப்படுகின்றன. ஆடு, கோழி முதலியவை பலியிடப்படுகின்றன.

ஒருவர் ஒரு பொருளைப் பார்த்து ''அழகாக இருக்கிறது'' என்று கூறினால் அந்தப் பொருளுக்கு சேதமுண்டாகும் என்று சிலர் நம்புகிறார்கள். அந்தப் பொருளுக்கு ''கண்ணூறு'' பட்டுவிட்டது என்பர். இதைத்தவிர்க்கவும் சிலர் சில மந்திரங்களையும் பொருள்களையும் பயன்படுத்துவதுண்டு.

புது வீடுகளிலும், பயிர்கள் செழித்து வளர்ந்த தோட்டங்களிலும், மனித உருவம் போல பொம்மையைச் செய்து வைப்பார்கள். சோதிடத்தில் உலகெங்கும் மக்கள் அதிக நம்பிக்கை வைத்துள்ளனர். இருந்தும் அதுவும் மூடநம்பிக்கையே என்று சிலர் கருதுகிறார்கள். மூடநம்பிக்கை எல்லா நாடுகளிலும் இருக்கிறது.

மக்களுடைய அறிவு வளர, இவ்விதமான நம்பிக்கைகள் குறைந்து கொண்டே வருவதை நாம் காண்கிறோம்.

**தொகுப்பு: என். எம்**
**(குழந்தைக்களஞ்சியத்திலிருந்து)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குழந்தைகளுக்கான பள்ளிகளில் மொண்டிசோரி பள்ளிகள் ஒரு வகை 1907ல் இத்தாலி நாட்டைச் சேர்ந்த "மொன்டிசோரி" அம்மையாரால் (Maria Montessori 1870 - 1952) இம்முறை வகுக்கப்பட்டது. உலகில் பலநாடுகளில் "மொண்டிசோரி" முறைப் பள்ளிகள் உள்ளன.

விளையாட்டு மூலமே எல்லாவற்றையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற கொள்கையே இதன் அடிப்படையாகும்.

"மொண்டிசோரி" பள்ளிகளில் குழந்தைகளுக்கு சுதந்திரம் உண்டு. பல குழந்தைகள் சேர்ந்து கூட்டுறவு மனப்பான்மையை இங்கு பெறுகின்றனர். பல குழந்தைகளுக் கிடையில் ஒவ்வொரு குழந்தையும் தனக்கு தானே ஆசிரியராக விளங்குகிறது. "மொண்டிசோரி" பள்ளிகளில் குழந்தைகளுக்கு வழிகாட்டவும் கண்காணிக்கவுமே ஆசிரியர்கள் இருப்பார்கள்.

"மொண்டிசோரி" ப் பள்ளிகளில் பல வகைப் பயிற்சிக் கருவிகள் இருக்கும் இக்கருவிகள் விளையாட்டுச் சாமான்கள் போல கண்ணைக்கவரும் வகையில் பல வண்ணங்களில் இருக்கும். இக்கருவிகளின் மூலம் ஆசிரியரின் உதவி இல்லாமலேயே குழந்தை பலவற்றைக் கற்று உணர்ந்து கொள்ளமுடியும். பிற்காலத்தில் எழுதவும், படிக்கவும், வரையவும் கற்றுக் கொள்வதற்கான பயிற்சியைக் குழந்தைகள் இக்கருவிகளின் வாயிலாகப் பெற்று விடுகின்றனர்.

கணிதம், பூகோளம், உயிரியல் முதலிய பல துறைகளுக்கேற்றவாறு பல வகைக் கருவிகள் இம்முறையில் உள்ளன. "கிண்டர்கார்ட்டன்" என்ற வகைக் குழந்தைப் பள்ளிகளும் உள்ளன. இப்பள்ளிகளில் பாடமுறைகள், குழந்தைகளின் விளையாட்டுக்களிலேயே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. குழந்தைகளின் மொழியறிவை வளர்ப்பதற்காக இங்கு கதைகளுக்கும் பாட்டுகளுக்கும் சிறப்பிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த முறையே "புரொபெல்" (Froebel) என்ற ஜேர்மானியர் 1839இல் வகுத்தார்.

தொகுப்பு: என். எம்

(குழந்தைக்களஞ்சியத்திலிருந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளைக்கு ஒரு முஸ்பாத்தி சங்கதி



## No Body

This is story about four People named Every body Some body ; Any body and Nobody. There was an important job to be done and Every body was sure that some body would do it. Anybody Could have done it, but Nobody did it. Some body got angry about that, because it was Everybody's job. Everybody thought Anybody could do it, but Nobody realized that Everybody wouldn't do it. If ended up, that Everybody blamed somebody when Nobody did what Anybody could have done!

By : 'Gyan C.Jain'



## நோபொடி

இது நான்கு பேர்களைக் கொண்ட ஒரு கதையாகும். அவர்கள் எவ்றிபொடி, சம்பொடி, எனிபொடி, நோபொடி ஆவர். அங்கே ஒரு முக்கியமான வேலை செய்ய வேண்டியிருந்தது. 'எவ்றிபொடி' நிட்சயமாக இருந்தார்கள். 'சம்பொடி' அதைச் செய்வார்கள் என்று, 'எனிபொடி' அதைச் செய்திருக்கலாம் ஆனால் 'நோபொடி' செய்யவில்லை. 'சம்பொடி' அதையிட்டு கோபங் கொண்டார்கள். ஏனெனில் அது 'எவ்றிபொடியின்' வேலையாகும், என்பதால்! 'எவ்றிபொடி' நினைத்தார்கள். அதை 'நோபொடி' செய்வார்கள் என்று! ஆனால் அதை எவ்றிபொடியும் செய்ய முடியாதென்று உணரவில்லை. 'எனிபொடி' செய்யக்கூடியதை 'நோபொடி' செய்த போது 'எவ்றிபொடி' 'சம்பொடியை' நிந்தனை செய்தார்கள்.

தமிழில்: ~ வாசகன் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்துப் பயன்பெறும் சங்கதிகள்



**கூட்டுறவு**

இன்று உலக முழுவதும் பரவியிருக்கும் கூட்டுறவு இயக்கத்தை தோற்றுவித்தவர் சர் ராபர்ட் ஓவன் 1850ஆம் ஆண்டு இந்த இயக்கம் தோன்றியது. முதலில் தோன்றிய சங்கம் இங்கிலாந்தின் ராக்டேல் நெசவாளர் கூட்டுறவு சங்கமாகும்.

**உழைப்பு இவ்வளவுதான்**

உழைத்து ஓடாகப் போனதாகச் சிலர் அலுத்துக் கொள்கின்றார்களே, உண்மையில் ஒருவர் உழைப்பது அவரது ஆயுளில் ஐந்தில் ஒரு பகுதி ஆண்டுகள் தான். ஒருவர் எழுபது ஆண்டுகள் வாழ்ந்தால் தூக்கத்தில் 25 வருடம் போய்விடுகிறது. சாப்பிடுவதற்குச் செலவிடுவது 6 வருடம், பொழுது போக்கில் 8 வருடம், ஆடை அணிவதிலும் அலங்காரத்திலும் 5 ஆண்டு. நோயில் படுப்பது 3 ஆண்டு. அரட்டையில் 6 ஆண்டு என்று ஆராய்ந்து கண்டிருக்கிறார்கள். மீதி உழைப்பது 13வருடம்தான்.

**வரலாற்றுப் புதுமை**

மிகக் குறைந்த காலத்தில் சுதந்திரமடைந்த நாடு பங்களாதேஷ் தான். மக்கள் அதற்காகப் பேராடியது ஒன்பதே மாதங்கள் தான். வரலாற்றில் இவ்வளவு குறுகிய காலத்தில் விடுதலையடைந்த நாடு வேறு எதுவுமேயில்லை.

**முதலும் முடிவும்**

பாரதியார் நடத்திய முதல் பத்திரிகை சக்கரவர்த்தி என்பதாகும். கடைசியாக நடத்தியது விஜயா. தீவிர அரசியலை எழுதியது இந்தியா பத்திரிகையில் தனிமை இரக்கம் என்ற கவிதை தான் அவர் முதலில் எழுதியது. சுதேசமித்திரனில் வெளியான அவருடைய முதல் கவிதை வங்கமே வாழ்க. கடைசியாக எழுதிய கட்டுரை ஸ்ரீ ரவீந்தர திக் விஜயம். இது 25.08.1921ல் சுதேச மித்திரனில் வெளியானது.

**வெள்ளை மாளிகை**


வாஷிங்டனிலுள்ள ஜனாதிபதி மாளிகைக்கு வெள்ளை மாளிகை என்று பெயர். முதல் ஜனாதிபதியான வாஷிங்டன் காலத்தில் கட்டும் வேலை தொடங்கியது. ஆனால் அவரது வாழ்நாளில் முடியவில்லை. இம்மாளிகை விமானக் குண்டு வீச்சிலிருந்து தப்ப ஒரு நிலவறை உள்ளது. பல நாட்கள் அங்கே இருக்க எல்லா வசதிகளும் கொண்டது. அறைச்சுவரின் கனம் ஒன்பது அடி. இரட்டை வரிசை எஃகுக் கதவுகள் கொண்டது. அப்போது ஒன்பது லட்சம் டாலர் செலவில் கட்டப்பட்டது. இது இருக்குமிடம் முக்கிய சில அதிகாரிகளைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. மாளிகை 18 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது.

- நன்றி அனுராகம் தமிழாக்கம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர்களுக்கு ஓர் கட்டாய அறிவுறுத்தல்!




# சிறுவர் - கல்வி
# கட்டாயக் கல்வி!

இலங்கை அரசாங்கம் 1997ல் 5வது தொடக்கம் 14வயது வரையான பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்ல வேண்டும் என பிரகடனப் படுத்தியுள்ளது.

**கல்வியானது ஒவ்வொரு பிள்ளையினதும் உரிமை. நீங்கள் உங்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பத் தவறும் போது...**

- அவர்களுடைய ஆற்றல், தேர்ச்சி, திறமை யாவும் நிறுத்தப் படுகிறது.
- பிறரால் அபாயம் ஏற்படுகிறது.
- வறுமையான வாழ்க்கையை எதிர்நோக்குவர்.
- புதிய தொழில்நுட்ப இயந்திரங்களை அவர்களால் இயக்க முடியாது போகும்.
- பொருட்களை வாங்கும் போதும், விற்கும்போதும் பெரியளவில் ஏமாற்றப்படுகின்ற அபாயத்தை எதிர்நோக்குவர்.
- சரி பிழை தெரிந்து கொள்ளாமல் ஆவணங்களில் கையெழுத்திட நேரிடும்.
- தகவல்களை அறிய பிறரில் தங்கியிருப்பர்.
- தூர இடங்களில் இருக்கும் நண்பர்களிற்கோ, உறவினர்களிற்கோ கடிதங்களை எழுத முடியாமல் தவிப்பர்.
- தங்களது உரிமை பற்றி தாங்களே அறியாமல் இருப்பர்.
- பிழையான வழிநடத்தலையும், சரியான வழி நடத்தலையும் இனங்கண்டு தங்களைப் பாதுகாக்க முடியாதவராக அவதியுறுவர்.
- தங்களது உடல் ஆரோக்கியம் பற்றி அறிவற்றவர்களாக இருப்பர்.
- சமூகத்தில் தாழ்வு மனப்பாங்கினால் துன்புற நேரிடும்.
- தங்களது முன்னேற்றப் பாதையை தீர்மானிக்க முடியாதவர்களாக இருப்பர்.
- வாசிப்பதிலும், எழுதுவதிலும் உள்ள மகிழ்ச்சியை இழப்பார்கள்.
- சுதந்திரமாக தன்னை வெளிப்படுத்த முடியாதவர்களாக இருப்பர்.
- தங்களுடைய பிள்ளைகளின் கல்வியிலும், பராமரிப்பிலும் பலவீனமானவர்களாக இருப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை உங்களது பிள்ளைக்கு நல்லவற்றை வழங்க வேண்டுமென்றால் இன்றே பிள்ளையை பாடசாலைக்கு அனுப்புங்கள்.

***எச்சரிக்கை :*** அற்ப சொற்ப வருமானத்திற்காக உங்கள் பிள்ளைச் செல்வங்களை, பாடசாலைக்கு அனுப்பாது விட்டால் அவர்களது எதிர்காலம் சூன்யமாகிவிடும்! அவர்கள் நல்ல பழக்கங்களைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்புகள் இல்லாமற் போய்விடும்! நீங்கள் உங்கள் பிள்ளைச் செல்வங்களை நல்ல பிரஜைகளாக உருவாக்காது விட்டால் தேசத் துரோகிகள் நீங்களே!

நன்றி : இணையம் - அ.பற்று.

## சந்தேகம்

சந்தேகம் ஒரு பிசாசு! அது ஒரு பயங்கரமான பிசாசு! சந்தேகம் என்ற பிசாசு அதுவரை சந்தோஷமாக வாழ்ந்தவர்களிடையே ஏற்படுமானால் சாதகமான சூழ்நிலையை விட, கசப்பான சூழ்நிலைகளே ஏற்படும். எத்தனையோ குடும்பங்களை சின்னா பின்னப்படுத்தி நடுத்தெருவுக்கு கொண்டு வந்திருக்கின்றது இந்த சந்தேகப்பிசாசு! எத்தனையோ ராஜ்யங்களை, பிரபுக்களை, நாடுகளை ஆட்சிகளை, பதவியாளர்களை தடம்புரள வைத்து நாசம் பண்ணியிருக்கின்றது இந்த சந்தேகப் பிசாசு!

இந்தப் பிசாசு வேறு எங்கேயுமில்லை. அது நமக்குள்ளேயே நமது ஒவ்வொருவர் மனங்களிலேயே தங்கியிருகின்றது.!

சந்தேகம் அதாவது ஒருவருடைய பேச்சில், பார்வையில், பழக்கத்தில், செய்கையில், தொடர்பாடலில் அணுகுமுறைகளில், தொனியில், தோற்றத்தில், வழமைக்குமாறான அறிகுறிகள், வித்தியாசமான சமிக்ஞைகள், மனசுக்குள் ஏற்படும் சலனம், சபலம் போன்றவை சந்தேகமாக உணரப்படுகின்றது எனலாம்.

அதன்பின்பு அந்த மனதில் நிம்மதி மகிழ்ச்சி சகவாசம், ஐக்கியம், ஒற்றுமை, கூட்டுவாழ்க்கை, கூட்டுறவு, அடுத்தவர்களுடைய பட்டம், பதவி, புகழ் பணம் சொகுசு, பாராட்டு, கௌரவம் என்பதெல்லாம். பொறாமை, எரிச்சலை, அழுக்காறை, வெறுப்பை, பகைமையை, குரோதமனப்பான்மையை உண்டு பண்ணி விடும். இத்தகைய பொல்லாத குணங்களை ஏற்படுத்தும் இந்த சந்தேகமெனும் "சைத்தானின்" ஆட்டம் புத்திஜீவிகள் முன்னிலையில் அசிங்கமாகக் காட்சிதரும்! "சந்தேகம்" என்பது நேரில் தன்னைக் காட்டிக்கொள்ளாமல் நீறுபூத்த நெருப்புப் போல் நெஞ்சில் புதைந்து கொண்டிருக்கும்.

இது தன்னைத் தானே அழிக்கும் ஒரு கொடிய "வியாதி" என்று கூட ஆன்றோர்கள் சொல்லி வைத்துள்ளார்கள்!

~ ஞானக்கண்ணன் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாசக்தி எடுத்த 85வது கூட்டுறவு விழாவிலே ஒலித்தவை (28.07.2007)

## கூட்டுறவில்லா ஊரில்...

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று கூறிய ஒளவையின் பொன் மொழி போல் கூட்டுறவு இல்லா ஊரிலும் குடியிருக்க வேண்டாம். மனிதர்கள் ஒற்றுமையாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்கு கூட்டுறவு அவசியம். நோயற்ற சமூகம் உருவாக வேண்டும். மூடத்தனமற்ற சமூகம் உருவாக வேண்டும். கல்வி அறிவுள்ள சமூகம் உருவாக வேண்டும் என அன்றே பாரதி வேண்டியுள்ளார். அவ்வேண்டுகோள் நிறைவேற வேண்டும் என்றால் கூட்டுறவு அவசியம் ''ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்'' என்பதற்கு இணங்க கூட்டுறவு இல்லா ஊரும் சுடுகாடேயாகும்.

மக்களிடையே சாதி, மத பேதமின்றி ஒற்றுமை பெருகவேண்டும். தமிழர்கள், இஸ்லாமியர்கள், சிங்களவர்கள், கிறிஸ்தவர்கள் என்ற சமய வேறுபாடுகள் மனிதனை நல்வழிப்படுத்தவே ஆதலால் கூட்டுறவில் பகைமையின்றி மனிதநேயம் தோன்றி ஒற்றுமை மலர வேண்டும். நாட்டில் சாந்தியும், சமாதானமும் உருவாக வேண்டும்.

## கூட்டுறவே சமாதானம்

கூட்டுறவு என்பது யாதெனில் மனிதர்கள் ஒன்றுபட்டு ஒற்றுமையாகச் செயற்படும் தன்மையேயாகும். இவ்வாறாக விளங்கும் இக்கூட்டுறவே மனிதர்களுக்கு மகிழ்ச்சியினை அளிக்கின்றது. இக்கூட்டுறவு அதாவது ஒன்று பட்டுச் செயற்படும் தன்மையில்லாவிடில் ஒவ்வொரு வீட்டிலும் நாட்டிலும் சண்டை சச்சரவுகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே காணப்படும். இவ் ஒற்றுமையுணர்வு ஒவ்வொரு மனிதரிடத்திலும் காணப்பட வேண்டியது அவசியமாகும். இக்கூட்டுறவின் மூலமே நாம் சமாதானத்தை கொண்டுவரலாம்.

நாம் இக்கூட்டுறவின் சிறப்பினை ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'' ''கூடி வாழ்ந்தால் கோடி நன்மை'' ''அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு'' போன்ற பழஞ்சொற்களிலிருந்தும் எம்மால் அறியக்கூடியதாயிருக்கின்றது. அடம்பன் கொடியானது முறித்தால் மிகவும் எளிதில் முறியக்கூடியது. ஆனால் இதுவே திரளாக வைத்து முறித்தால் அதனை முறிப்பது மிகவும் கடினமாகும். மற்றும் ஒரு மனிதனால் தூக்க இயலாதவற்றை பல மனிதர்கள் ஒன்று சேர்ந்து தூக்கினால் தூக்க முடியும். இவைகளை கூட்டுறவின் மகத்துவத்திற்கு உதாரணமாகக் கூறலாம். இக்கூட்டுறவிற்கு மற்றுமொரு உதாரணமாக மகாசக்தி நிறுவனத்தைக் கூறலாம். இவ்வாறாக மனிதர்கள் ஒன்றுபட்டு செயற்படும் கூட்டுறவின் மூலமே நாம் சமாதானத்தைப் பெறமுடியும். இவ்வாறான கூட்டுறவுத்தன்மை இல்லாவிடில் நாம் பல்வேறு வகையான சிக்கல்களையும் சீரழிவுகளையும் எதிர்நோக்குவோம் எனவே நாம் யாவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து ஒற்றுமையாக வாழ்ந்தால் நாம் நிச்சயம் சமாதானத்தைப் பெறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவில் காண்போம் சமாதானம்

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற முதுமொழியானது மனிதர்களுக்கிடையிலான ஒற்றுமையையும் சேர்ந்து வாழும் நிலையினையும் அதன் மூலமான வெற்றி நிலையினையும் விளக்கி நிற்பதாக அமைந்துள்ளது. இதன்படியே மக்கள் கூட்டாக உறவுகளைப் பேணுவதன் மூலமே சமாதானத்தை கட்டியெழுப்ப முடிகின்றது.

சின்னஞ் சிறிய எறும்புகள் கூட தமது உறவுகளுடன் கூட்டாகச் சேர்ந்து தமக்கு சுமக்க முடியாத உணவைக்கூட சுமந்து சென்று சமாதானமான முறையில் பகிர்ந்து உண்ணுகின்றது. எனவே கூட்டுறவின் மூலம் சமாதானமும் ஒற்றுமையான வாழ்க்கையினையும் அந்த சின்னஞ்சிறு எறும்புகள் அனுபவிக்கின்றன.

ஆனால் ஆறறிவு படைத்த விண்ணில் வீடுகட்டி வாழத் தெரிந்த மனிதனிடையே எங்கனம் கூட்டுறவும் சமாதானமும் உள்ளது என்பதை ஆராய வேண்டியுள்ளது.

இதற்கேற்ப ஆரம்ப காலங்களில் சாதாரணமாக அம்மா, அப்பா, பிள்ளைகள், மாமா, மாமி, பாட்டி, பாட்டன் என ஒரு கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த மனிதன் இன்று அவ்விணைப்புகளை தகர்த் தெறிந்து இயந்திர மனிதன் போல் தமது சொந்த அலுவல்களை கவனிக்க நேரம் இல்லாமல் பொறாமை, போட்டி, வஞ்சனை என்ற கட்டுக்களால் கட்டுண்டு சமாதானத்தை தூக்கி எறிந்து வாழ்க்கையுடன் முரண்பட்டுக்கொண்டிருக்கின்றான்.

சாதாரணமாக பிள்ளைகளுடன் முரண்பாடு, அயலவர்களுடன் முரண்பாடு, அயல் கிராமத்தோடு முரண்பாடு, சாதி முரண்பாடு என பல முரண்பாடுகளினால் சமாதானத்தை தூக்கி எறிந்துவிட்டான். இதனாலே இன்று நாம் கூட்டாக சாதிக்கவேண்டிய பலவிடயங்கள் மூன்றாம் தரப்புகளால் களவாடப்பட்டுக்கொண்டு செல்லப்படுகின்றன.

இன்று உலக நாடுகளில் கூட்டுறவு இன்மையால் நாடுகளுக்குள் நாடு பல நவீன ஆயுதங்கள் உற்பத்தி செய்யப்பட்டு சமாதானம் என்பது பீரங்கி குழல்களுக்கிடையில் அகப்பட்டுக் கிடக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நிலைமையினை நாம் இலங்கையில் கூட காணலாம். தமிழ், சிங்கள இனங்களுக்கிடையே ஒரு சுமுகமான கூட்டுறவு இன்மையாலேயே இரு இனங்களும் ஒன்றோடு ஒன்று மோதி இரத்த வெள்ளத்தில் இலங்கை மிதந்து கொண்டிருப்பதை நாம் கண்ணால் காண முடிகின்றது.

எனவே ஒரு நாடாயினும் சரி, ஒரு சமூகமாயினும் சரி, ஒரு குடும்பமாயினும் சரி, அங்கு வாழ்கின்றவர்களுக்கிடையே ஒருவரை ஒருவர் மதிக்கும் பண்பும் ஒருவரின் கஷ்ட நஷ்டங்களில் மற்றவர் பங்கெடுக்கும் நிலையுமான கூட்டுறவு வளரும் பட்சத்திலேயே சமாதானம் நிலவும். முரண்பாடுகளால் பயனற்ற விடயங்களை உருவாக்கலாமே தவிர, சமாதானத்தை வளர்த்துவிட முடியாது! இனம், மதம், சாதி, பால் என்ற மூடக்கட்டுகளில் இருந்து விடுபட்டு "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கூட்டுறவில் வாழ்ந்து சமாதானத்தை கட்டி எழுப்புவோம் என்பதோடு "தானத்தில் சிறந்த தானம் அன்னதானம் என்பதை மதித்து இன்றைய சூழலில் தானத்தில் சிறந்த தானம் கூட்டுறவின் மூலமான சமாதானமே" என்று உறுதியாகக் கூறலாம்.

1. மனித உரிமை என்றால் என்ன?
   மறுக்கப்படாத சமத்துவமான மனித வாழ்வியல் சுதந்திரம்

2. 'மனித உரிமை மீறல் என்றால் என்ன?
   சமத்துவமான மனித வாழ்வியற் சுதந்திரம் மனிதனால் மறுக்கப்படுதல்

3. 'வன்முறை' என்றால் என்ன?
   மனித நேயம் – தர்மம் அற்ற காட்டுமிராண்டித்தனமான மானிட வாழ்வியலை கௌரவிக்காது மனிதனால் மேற்கொள்ளப்படுகின்ற ஈனச் செயல்

4. 'யுத்தம் என்றால் என்ன?
   முற்றிய முரண்பாடுகளின் – பகைமையின் குரூர வடிவம்

5. 'சமாதானம் என்றால் என்ன?
   மனமும் – மனமும், இனமும் – இனமும், சனமும் – சனமும், நாடும் – நாடும், முரண்பாடு துறந்து – புரிந்துணர்வுடன் சமரசமாக வாழும் சக – வாழ்வு நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலையடிவேம்பு கூட்டுறவு விழாவிலே....

## பிரதேச செயலாளர் திரு. எஸ். கரன் பேச்சு



''மகாசக்தியின்'' உன்னதமான வளர்ச்சி கண்டு பெருமிதப் படுகிறேன். நான் உயர்தரக் கல்வியை கற்றுக் கொண்டிருந்த 1992ம் ஆண்டளவில் இந்த மகாசக்தி 1000/- ரூபா கூட கடனுதவி செய்வதற்கு சிரமப்பட்டது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இன்று, இந்த நிறுவனத்தை நம்பியவர்களுக்கு 100000/- ரூபா தாராளமாகக் கடனுதவி வழங்கப்படுவதை அறிந்து பெருமகிழ்ச்சி யடைகின்றேன்! ஆச்சரியப்படுகின்றேன். அத்தோடு, உள்ளகக் கட்டமைப்புகளோடு தொழில் வாய்ப்புக்களும், பெண்களுக்கு வழங்கி அவர்களை வாழ வைத்திருப்பதை அறியும் போது, மகாசக்தியின் உயர்வான மக்கள் சேவையை இப்பிரதேச மக்கள் நிட்சயம் கௌரவித்தே ஆகவேண்டும்.''

## கூட்டுறவு உதவி ஆணையாளர் ஜனாப். ரபாய்டீன் பேச்சு

''சர்வதேச கூட்டுறவு தினத்தை ஒரு பெருவிழாவாக வருடந்தோறும் 'மகாசக்தி' எடுத்து தனக்கென ஒரு பெருமையை தேடிக் கொண்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். கூட்டுற வாளர்களுக்கு முன்னுதாரணமாக கடந்த 15 வருடங்களாக இப்பிரதேசத்திலே மிகச் சிறப்பாக இயங்கி, வட கிழக்கு மாகாணங்களில் மட்டுமல்ல; இலங்கை முழுவதிலும் குறிப்பிட்டு பாராட்டக்கூடிய-கௌரவிக்கக் கூடிய ஒரு சிக்கனக் கடன் வழங்கும் சங்கமாக 'மகாசக்தி' விளங்குகின்றது.



ஐக்கியமும் நாணயமும் உறுதியாக இருக்கின்ற இடத்திலே கூட்டுறவை யாரும் எளிதில் தகர்த்து விட முடியாது. அந்த வகையில் 'மகாசக்தி'யின் எழுச்சியும் வளர்ச்சியும் குறிப்பிடத்தக்கதாகும்.''

(மகாசக்தி கூட்டுறவு மண்டபத்தில் நிகழ்ந்த 85வது சர்வதேச கூட்டுறவு விழாவிலே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருமுருக வாரியாரின்"



## சமரச நோக்கு

சமரசம் என்ற தன்மை பெரியவர்களிடம் இருக்கும் பொருள்களில் ஏற்றத்தாழ்வு எப்போதும் இருக்கும் சந்தனமும் - சாணமும் ஒன்றாகி விடாது.
பள்ளமும் மேடும் ஒன்றாகி விடாது.
ஒரு தாயின் மூத்தபிள்ளை நீதிபதி - இளையவன் கூலிவேலை நமக்கு இந்த இருவரிடமும் வேற்றுமையுணர்ச்சியுண்டாகும். ஆனால் இருவரையும் பெற்ற அன்னை ஒன்றுபோல் பார்த்து உபசரிப்பாள். விமானத்தில் பறக்கிறவனுக்கு மேடும் - பள்ளமும் ஒன்றாகிவிடும். அதுபோல தாயுள்ளம் படைத்த ஆன்றோர்களிடம் சமரசம் என்ற பெருந்தன்மை உண்டாகிறது.

## கெட்டது



- பார்த்துக் கெட்டது பிள்ளை
- பார்க்காது கெட்டது பயிர்
- இட்டுக் கெட்டது காது
- இடாது கெட்டது கண்
- கேட்டுக் கெட்டது குடும்பம்
- கேளாது கெட்டது கடன்
- உண்டு கெட்டது வயிறு
- உண்ணாது கெட்டது உறவு

- வாரியார் -

## மாட்டான்

- கற்பிக்கப்பட்ட பின் சீடன் குருவைக் கவனிக்க மாட்டான்
- திருணம் ஆனவன் தாயைக் கவனிக்க மாட்டான்
- ஆசையற்றவன் பெண்ணைக் கவனிக்க மாட்டான்.
- பயனடைவந்தவன் உதவியவனைக் கவனிக்க மாட்டான்.
- கரையை அடைந்தவன் படகைக் கவனிக்க மாட்டான்.

- வாரியார் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆசாமி" களே போதும்!



சுனாமியே! நீ
வரவேண்டாம்
இப்போதிருக்கும்
ஆசாமிகளே போதும்!
நீ வராமலேயே...
இங்கு...
உயிர்கள் - உடமைகள்
திடீர் தீடீரென
நாளுக்கு நாள்
அழிகின்றன... இல்லை...
அழிக்கப்படுகின்றன..!
விசாரணையுமில்லை...
தீர்ப்புகளுமில்லை
உன்னைப் போல்...!



உன்னால் இவர்களை
ஜெயிக்கவே முடியாது...!

இந்தக் கணக்கில் நீ
நிட்சயம் தோற்றுவிடுவாய்...!

- கவிநிலா -

(சுனாமி மீண்டும் வருவதாக செய்தி கேட்டபோது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றங்களை நோக்கிய பயணத்தில்.....



மகாசக்தியின் இணைப்புப்பணியகங்கள் மேலும் இரண்டு அண்மையில் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் திறக்கப்பட்டுள்ளன.

இணைப்பு பணியகம் நான்காவது (MCO - 4) கோளாவில் கிராமத்திலும் ஐந்தாவது (MCO - 5) கண்ணகிகிராமத்திலும்; அமைக்கப்பட்டு இணைப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

MCB - 4 பணியகத்தின் பொறுப்பாளராக செல்வி. T. குணசுந்தரியும் CBO - 5 பணியகத்தின் பொறுப்பாளராக திருமதி A. விஜயானந்தியும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

வட்டாரங்கள் தோறும் தனித்தனியாக ஒவ்வொரு ஊக்குவிப்பாளரின் பொறுப்பில் ஏழு பேர் கொண்ட குழு அமைப்போடு 1992 களிலிருந்து இயங்கி வந்த கிளைச் சக்திகள் ஒவ்வொரு இணைப்பு பணியகத்தின் கீழ் நான்கு ஐந்து என்ற எண்ணிக்கையில் இணைக்கப்பட்டு, தனித்தும் ஒருமித்தும் செயற்பட்டு வருகின்றன.

நிருவாகத்துறை, முகாமைத்துவமுறை, தலைமைத்துவ முறையை இலகுவாக்கிக் கொள்வதற்காகவும், கிளைச் சக்திகளின் செயற்பணிகளை வலுவூட்டுவதற்காகவும் இம்மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு இணைப்பு பணியக மட்டத்திலும் பங்காளர்களின் அறிவு மேம்பாட்டுக்கான நிறுவன கலாசார மேம்பாட்டுக்கான செயலமர்வுகள் இப்போது நடைபெற்று வருகின்றன.

- துளசி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாசக்தி அமைப்பு மூலம் 2007.06.01 தொடக்கம் 2007.09.29 வரை நடைபெற்ற நிகழ்வுகள்

1. 2007.06.06ம் திகதி 12 பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான சுற்றாடல்கல்வி தொடர்பான கருத்தரங்கு வலயக்கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை லொயிட்ஸ் கட்டிடத்தில் நடைபெற்றது.

2. 2007.06.07 லங்கெம் நிறுவன அனுசரணையுடனான விவசாயக் கருத்தரங்கு மகாசக்தியின் விவசாயப் பயன்பெறுநர் மத்தியில் நடைபெற்றது. கொழும்பு தலைமைக் காரியாலயத்திலிருந்து அதிகாரிகள் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

3. 2007.06.14 CHA நிறுவனத்தினால் சமாதானமும் அபிவிருத்தியும் தொடர்பான கலந்துரையாடல் அம்பாறை கச்சேரியில் இடம்பெற்றது. பங்காளி அமைப்புகள் கலந்து கொண்டன.

4. 2007.06.15ல் "டயகோணியா" நிறுவன அனுசரணையுடன் 'கண்காணிப்பும் மதிப்பீடும்' பயிற்சிக் கருத்தரங்கு, கண்டி திகன 'ஒறுத்தொட்ட' ஹோட்டலில் நடைபெற்றது. ஸ்ரீ லங்காவிலுள்ள DK பங்காளிகள் பங்கேற்றனர்.

5. அம்பாறை மாவட்டத்திலிலுள்ள பின்தங்கிய சுனாமியால் பாதிக்கப்பட்ட ஐந்து கிராமங்களின் அபிவிருத்தி மேம்பாட்டுக்கான உடன்படிக்கை ஒன்று 2007.06.26ல் கைசாத்திடப்பட்டது. Mercy Corp அதிகாரி + MF அதிகாரி இவ் ஒப்பந்தத்தில் கைசாத்திட்டனர்.

6. 2007.06.29ல் 166 வது சுற்றுக்கடன் வழங்கு நிகழ்வின்போது 21 பயனாளிகளுக்கு 749000/- ரூபா கடனாக வழங்கப்பட்டது. பயனாளிகள், ஆலையடிவேம்பு பிரதேசத்திலுள்ள 08 CBO க்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. 2007.07.06ல் 4வது, 5வது இணைப்புக் காரியாலயங்கள் திறந்து வைக்கப்பட்டன. 4வது கிளைக்காரியாலயம் (MCO - 4) கோளாவில் அலுவலகக் கட்டிடத்திலும், 5வது இணைப்பலுவலகம் (MCO - 5) கண்ணகி கிராமம் வீடு ஒன்றிலும் திறந்து வைக்கப்பட்டது.

8. 2007.07.28 85வது சர்வதேச கூட்டுறவு தினவிழா சங்கத் தலைவர் கவிஞர் மணிவாசகன் (ஜே.பி.) தலைமையில் விமரிசையாக மகாசக்தி கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் கல்முனை கூட்டுறவு உதவி ஆணையாளர் ஜனாப். A.L.M. றபாய்தீன் ஆலையடிவேம்பு பிரதேச DS திரு. S. கரன் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

9. 2007.08.10ல் 167வது சுற்றுக்கடன் வழங்கு நிகழ்வு நடைபெற்றது. 36 பயன்பெறுநர்களுக்கு 11,83,000/- ரூபா கடனாக வழங்கப்பட்டது. பிரதேசத்திலுள்ள 12 CBO க்களிலிருந்து பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

10. 2007.08.16ல் 'Symrina' அதிகாரிகள், அகத்திக்குளம் குடியேற்றக் கிராம மக்கள், மகாசக்தி நிருவாகத்தினர் கலந்துரையாடல் புதிய குடியேற்றக்கிராமமான அகத்திக்குளத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பாடசாலைக்கட்டடத்தில் திரு. A. கணேசன் ('சிமிர்னா' திட்ட உத்தியோகத்தர்) தலைமையில் பாலர் பாடசாலை தொடர்பாக நடைபெற்றது.

11. 2007.08.20ல் இருந்து 2007.08.23 திகதி வரை Mercy Corps ஏற்பாட்டில் நடைபெற்ற சமூக மேம்பாட்டு திட்டம் சம்பந்தமாக (ARR) செயலமர்வு ஒன்று தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்றது. இதற்கு மகாசக்தி இணைப்பாளர் ஆறுமுகம் அசோகா கலந்து கொண்டார்.

12. 2007.08.22ல் திறன் விருத்திப்பயிற்சி ஒன்று சோவா அலுவலகத்தில் 'சோவா' வின் ஏற்பாட்டில் மகாசக்தி நிறுவன மேல் மட்டப்பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது. திரு. எஸ். செந்துராஜா 'சொண்ட்' நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளரால் நெறிப்படுத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. 2007.08.31ல் 20 பயன்பெறுநர்களுக்கு 7,32,000/- ரூபா 168வது சுற்றுக்கடன் வழங்கலின்போது சுயதொழில் கடனுக்காக வழங்கப்பட்டது. 13 CBO க்களிலிருந்து பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

14. 2007.09.01ல் 'அனர்த்த முகாமைத்துவம்' என்னும் பயிற்சிக் கருத்தரங்கு அம்பாரை மாவட்ட இணையத்தின் ஏற்பாட்டில் இணைய அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் மகாசக்தி ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

15. 2007.09.02ல் அகத்திக்குளம் இத்தியடியில் 'Symirina' நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட பாலர் பாடசாலையை நடாத்தும் பொறுப்பு கையளிக்கப்பட்டு, மகாசக்தியினால் திறந்து வைக்கப்பட்டது. இதற்கு மகாசக்தி தலைவர், உபதலைவி ஆகியோர் கலந்து கொண்டனர்.

16. 2007.09.25ல் Mercy Corps Financial Orientation மகாசக்தி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதற்கு மகாசக்தியின் அதிகாரிகளும் ஊழியர்களும் கலந்து கொண்டார்கள்.

17. 2007.09.26ம் திகதி விவசாயப் பயன்பெறுநருக்கான மற்றொரு கருத்தரங்கு 'லங்கெம்' நிறுவனத்தினால் நடாத்தப்பட்டது. கொழும்பு தலைமைக்காரியாலயத்திலிருந்து அதிகாரிகள் வருகை தந்திருந்தனர்.


18. 2007.09.26ல் 169 வது சுற்றுக்கடன் வழங்கு நிகழ்வு இடம்பெற்றது. 13 பயன் பெறுனர் 5,37,000/- ரூபா சுயதொழில் கடனாகப் பெற்றனர். 08 CBO க்களிலிருந்து பயன்பெறுநர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.





தகவல்பிரிவு: - துளசி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இணையத்தின் தகவல் துளிகள்



- அம்பாரை மாவட்ட அரச சார்பற்ற இணையத்தில் 1997 முதல் இன்று வரை 23 அங்கத்துவ நிறுவனங்கள் உறுப்புரிமை பெற்றிருந்தன.

- இவற்றில் 3 நிறுவனங்கள் ஆளுநர் சபையின் தீர்மானப்படி வெளியேற்றப்பட்டு அங்கத்துவ அந்தஸ்தை இழந்துள்ளன.

- இணையத்தின் ஆளுநர் சபையில் மொத்தம் 08 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள்.

- 2007ம் ஆண்டுக்கான புதிய ஆளுநர் சபை தெரிவில் பின்வருவோர் ஆளுநர் சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.



| | | |
|---|---|---|
| 1. | எம்.ஐ. ஹபில் | தவிசாளர் |
| 2. | வி. பரமசிங்கம் | உப த்விசாளர் |
| 3. | எஸ். ஆப்தீன் | உப தலைவர் |
| 4. | எஸ்.ஜே.தேவானந்த் | செயலாளர் |
| 5. | திருமதி. எஸ். வாணி | பொருளாளர் |
| 6. | என்.எல்.எம். அனீஸ் | உறுப்பினர் |
| 7. | திருமதி. ரி. மனோகரராஜா | உறுப்பினர் |
| 8. | செல்வி. எ.எல். றினோசா | உறுப்பினர் |
| 9. | எஸ். சாந்தகுமார் | உறுப்பினர் |

- 2005ல் நடைமுறைப்படுத்தப்பட்ட பயிற்சி - செயலமர்வுகள் வருமாறு:

1. முகாமைத்துவ பயிற்சி - 03 நாட்கள்
   20 பங்குபற்றுநர்கள்

2. திறனபிவிருத்திப் பயிற்சி - 03 நாட்கள்
   20 பங்குபற்றுநர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சூழல் - போதைவஸ்து தடுப்புக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்
(ஏ. டபிள்யூ எப் ஊடாக)

4. சூழல், சமாதானம் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம்
(மறுமலர்ச்சி ஊடாக)

- மீன்பிடிச் சங்கத்தின் தேவை மதிப்பீட்டின் கீழ் அம்பாறை மாவட்ட இணையத்தின் 16 அங்கத்துவ அமைப்புக்கள் ஊடாக மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 71 மீனவர் சங்கங்கள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, 59 மீனவர் சங்கங்களின் மதிப்பீட்டறிக்கைகள் இணையத்தினூடாக உணவு விவசாய நிறுவனத்திடம் (எப் ஏ ஓ) கையளிக்க ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- இணைய அங்கத்துவ அமைப்புக்களின் தொடர்ச்சியான வற்புறுத்தலின் காரணமாக டயகோணியா சர்வதேச நிறுவனம் சமாதான சகவாழ்வு திட்டமொன்றை அம்பாறை மாவட்டத்தில் பரீட்சார்த்தமாக பங்காளிகளல்லாத ஆனால் அங்கத்துவ அந்தஸ்தைப் பெற்றுள்ள அமைப்புக்களிடையே அமுலாக்கத்துக்காக விட்டுள்ளது. முஸ்லிம், தமிழ் நிறுவனங்கள் இரண்டு அல்லது மூன்று இணைந்து இத்திட்ட நிகழ்ச்சியை கூட்டாக மேற்கொண்டுள்ளது.

~ தகவல் அக்கறையான் ~

## ஒரு நல்ல சங்கதி

*ஒரு நல்ல சங்கதி இதில் இருக்கிறது. 2008 சித்திரைத்திங்களில் திருக்குறள் விழாவொன்றை மகாசக்தி ஏற்பாடு செய்யவுள்ளது. விழாவில் அரங்கேற பல சுவையான நிகழ்ச்சிகள் காத்திருக்கின்றன. இவற்றில் ஒன்று - திருக்குறள் மனனப்போட்டி! வேறு திருக்குறள் பற்றிய பேச்சுப் போட்டிகளும் நடைபெறவிருக்கின்றன. பல்வேறு வெகுமதிகள் உங்களுக்காக போட்டிகளில் வெற்றி கொள்பவர்களுக்காக, வழங்கப்படும். ஆகவே சங்கதி நூலைக் கைவிடாதீர்கள்.*

*பெரும்பாலும் சங்கதி நூல்களிலிருந்தே வினாக்கள் தொடுக்கப்படும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாசக்தியின் விவசாய அபிவிருத்திச் சேவை

மகாசக்தி நிறுவனம் ஆலையடிவேம்பு பிரதேச விவசாயிகளின் நலன் கருதி 2007 சிறுபோக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள 89 விவசாய அங்கத்தவர்களுக்கு விவசாய உள்ளீடுகள் களை நாசினிகளை கடன் அடிப்படையில் வழங்கியுள்ளது. எமது நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கடன் தொகை ரூபா 911525/-

கொடுக்கப்பட்ட கடன்கள் யாவும் 04 மாத முடிவில் அங்கத்தவர்களால் 100% மீளளிக்கப்பட்டு வந்துள்ளது. விவசாய இரசாயன உள்ளீடுகள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட "லங்கம்" நிறுவனத்தாரிடமிருந்து பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி விவசாயத்தில் ஈடுபடுவோருக்கு விவசாயப் பயிர்ச் செய்கை சம்பதந்மான பயிற்சிகள் விவசாய பயிற்சி போதனாசிரியர்களின் உதவியுடன் நடாத்தப்படுகிறது.

## 2007 சிறுபோக விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன விபரங்கள்

| தொ. இல | சக்தி | அங்கத்தவர் எண்ணிக்கை | கடன்தொகை | மீளளிப்புக் காலம் | கிராமம் |
|---|---|---|---|---|---|
| 1. | பராசக்தி | 04 | 33750.00 | 4 மாதம் | அக்கரைப்பற்று-7 |
| 2. | ஜெயசக்தி | 06 | 62875.00 | 4 மாதம் | அக்கரைப்பற்று-9 |
| 3. | யுகசக்தி | 04 | 40375.00 | 4 மாதம் | அக்கரைப்பற்று-7 |
| 4. | தர்மசக்தி | 01 | 16400.00 | 4 மாதம் | அக்கரைப்பற்று - 07 |
| 5. | அருட்சக்தி | 01 | 6000.00 | 4 மாதம் | வாச்சிக்குடா |
| 6. | ஸ்ரீசக்தி | 01 | 7350.00 | 4 மாதம் | அக்கரைப்பற்று - 08 |
| 7. | நவசக்தி | 17 | 144550.00 | 4 மாதம் | கோளாவில் III |
| 8. | சர்வசக்தி | 24 | 297225.00 | 4 மாதம் | கோளாவில் III |
| 9. | வீரசக்தி | 10 | 79600.00 | 4 மாதம் | நாவற்குடா |
| 10. | சுடர்சக்தி | 08 | 98425.00 | 4 மாதம் | ஆலையடிவேம்பு |
| 11. | தெய்வசக்தி | 01 | 1350.00 | 4 மாதம் | தீவுக்காலை |
| 12. | துருவசக்தி I | 03 | 35600.00 | 4 மாதம் | கண்ணகி கிராமம் |
| 13. | துருவசக்தி II | 03 | 27225.00 | 4 மாதம் | கண்ணகி கிராமம் |
| 14. | ஜீவசக்தி | 05 | 47100.00 | 4 மாதம் | சின்னக்குளம் |
| 15. | யோகசக்தி | 01 | 13700.00 | 4 மாதம் | அக்கரைப்பற்று |
| | | **89** | **911525.00** | | |

**களைநாசினி வகை அளவு**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | நொமினி | - | 456 பெட்டி | 2. | சட்டுனில் | - | 24 |
| 3. | M 60 - 400ml | - | 45 | 4. | m 60 11 | - | 26 |
| 5. | m 60 - 400 ml | - | 45 | 6. | புரோபனில் | - | 108 |
| 7. | 3, 4 DPA | - | 12 | 8. | டலன்ட் | - | 07 |

தகவல் : எம். இலட்சுமணன்
அபிவிருத்தி உத்தியோகத்தர் மகாசக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கூட்டுறவு விழாவில் பரிசு பெற்ற கவிதை)

# கூடி வாழ்தல்



ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - என்கிறார்களே
ஒற்றுமையே பலம் என்று சொல்கிறார்களே
கூட்டுறவே நாட்டுயர்வு என்கிறார்களே
கோடி நன்மை கொண்டுவரும் கூட்டுறவாமே
கூடி வாழ ஏன் தயக்கம் மக்கள் கொள்கிறார்
கோடி நன்மை ஏன் எதற்கு என்பதனாலா
நாடிவரும் மக்களுக்கு நன்மை செய்வதால்
நாம் எடுத்த பிறவிக்கொரு வரம் கிடைக்குமே



மற்றவரைச் சுரண்டி வாழ்தல் தீது பயக்குமே
மனித நேயமில்லையெனில் பாவஞ் சூழுமே
கற்றதெல்லாம் மறந்து வாழ்தல் - மடமையல்லவா
கற்றபடி வாழ்வதனால் - கீர்த்தி யல்லவா
உற்றவரை - உறவினரை ஒதுக்கி வைப்பதும்
உறுப்பினரை ஊழியரை வெறுத்து நிற்பதும்
வேற்றுமையைக்காட்டி நிற்கும் குணங்களல்லவா
விளங்கியபின் கூடி வாழ்தல் பெருமையல்லவா



ஒற்றுமைக்கு காகம் என்று சொல்கிறார்களே -
கரைந்துண்ணும் ஜாதியென்ற காரணத்தாலா
தொற்று நோய்கள் போலே வன்முறைகள் தேவையா - அது
தொலைந்து வாழ்வில் கூட்டுறவாய் வாழலாகாதா?
குறைவுக் கூறித்திரிவதாலே உயர்வு கிடைக்குமா?
குற்றமற்ற வாழ்வுக்கீடு உலகில் இருக்குமா
தோற்றுப்போன காலத்தை நாம் மாற்றியாகுவோம்
துணிந்து நின்று கூட்டுறவாய் - வாழ்ந்துகாட்டுவோம்.


~ ஹேமா ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்குமுறைக்கெதிரான ஓர் மொழி பெயர்ப்புக்கவிதை

# வோட்டும் வேட்டும்





வோட்டு
அதென்னவெனில் வாக்களித்தல்
இதோ பார் பெரியதொரு பெட்டி
நீளமாக அதில் ஒரு துவாரம்
ஓம், உண்டியல் போன்று
உனக்கு தெரிவுகள் உண்டு
கொடூரமான அரசாங்கம் வேண்டுமா?
அல்லது நல்ல அரசாங்கமா?
சோம்பேறி அரசாங்கமா?
அல்லது செயற்படும் ஒன்றா
மக்களை யார் பராமரிப்பது என்று
முடிவுசெய்யச்
சதுரமான காகிதத் துண்டில்
நீ ஒரு X போட வேண்டும்
அதற்கு முன்னர் நீ
உன்னை அடையாளம் காட்ட வேண்டும்
அது சுலபம்
அடையாள அட்டை மட்டுமே தேவை
அது பாஸ் புத்தகம் போல இருக்கும்
வித்தியாசம் ஏதென்றால்
அதை வீட்டில் விட்டு வந்ததெனில்
அகப்பட மாட்டாய்
அது வோட்டு
இனி வேட்டு
ஆ, இப்போது, உனக்குக் கட்டாயமாக
வேட்டு என்னவென்று தெரிந்திருக்கும்

"க்றிஸ் ஃபான் வைக்"
(தென்னாபிரிக்கர்)
நன்றி: பணிதல் மறந்தவர் நூலிலிருந்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசத்தை விட்டு மறைவேன்




நானும் உனைப் போல
வானுலகம் செல்ல
நண்பனே என்னை வாழ்த்து
மானுடம் மரணித்த
மண்ணில் இனி எனது வாழ்வினை இழுத்து மூடு.



சூரியனின் சுடுகதிர்கள்
துளைக்கின்ற குளிர்காற்று
தொட முடியா இடமடைந்தாய்
காரிருளும் இடி மின்னல்
கக்கும் கடுங்காற்றின்
கவலைகளை விட்டொழிந்தாய்
வீடு கல்வி கோடி பொருள்
வெல்லாத இடம் நோக்கி
விண்வெளியில் மறைந்து போனாய்
தேடி ஒருநாள் வருவேன்
செங்குருதி சிந்துகின்ற
இத் தேசத்தை விட்டு மறைவேன்

துப்பாக்கிக் குண்டொன்று
துளையிட்டு நீ உடலம்
தூளாக்கிச் சாகவில்லை.
அப்பாவி ஆக்கியுனை ஆக்கினைக்குள்
ஆளாகி
அவதியுற்று மாயமில்லை
செத்தாலும் உன் உடலம்
சிறப்பாகப் போனதடா
சிரிப்போடு ஊர் போய் சேர்ந்தாய்
செங்குருதி சிந்துகின்ற தெரு நிறைந்த
என்னுடைய
தேசத்தை விட்டு மறைவேன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணையும் மண்ணையும்
அகலவிரிக்கின்ற
விழிகளைக் காணவில்லை
வேடம் புனைகின்ற உயிரற்ற பொம்மைகளின்
வேடிக்கை ஓயவில்லை.
சன்னத்தில் சுகம் காணும் ரோபோ மனிதர்களின்
தசைகளை உலுக்குவதற்கு
என்னுயிர் நான் தருவேன் நண்பனே
நீ மட்டும்
இயற்கையாய் இறந்து போனாய்


(ஒரு நண்பனின் மறைவு குறித்து 1986ல் எழுதிய ஒரு கவிதை)

– கல்லூரான் –

## பார்வைகள்



"ஒரு பேராசிரியர் மதிநுட்ப திருஷ்டியும், அரசியல்வாதி தூர திருஷ்டியும், தத்துவவாதி அகத்திருஷ்டியும் கொண்டவர்களாக இருக்க வேண்டும்."



## SIGHTS

"A proffessor must have fore sight, a Politician farsight, and a Philosopher in sight"

– யாரோ –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பேருந்துகளில் புகைத்தல் இதில் போனால் சங்கடம்



பொது மக்கள் அரசாங்கத்தை மதித்து நடக்க வேண்டும. அரசாங்கம் பொதுமக்களை மதித்து நடக்க வேண்டும். அரசாங்கம் பொதுமக்களை மதித்து நடக்கிறதா? இல்லையா? என்பது வேறு பிரச்சினை.

ஆனால் பொதுமக்கள்.........?
அரசாங்கத்தையல்ல, அரசாங்கத்தின் பல்வேறுபட்ட அமைப்புக்களின் சட்ட விதிகளை பொதுமக்கள் மதித்து நடக்கிறார்கள் என்று நான் சொல்லத் தயாராக இல்லை. பொது மக்களின் சௌகரியங்களுக்காக அல்லது வீண் சிரமங்களை தவிர்ப்பதற்காக, அல்லது தொல்லைகளை அல்லல்களை, இன்னல்களை, இடர்களை, துன்பங்களை அகற்றுவதற்காக; அல்லது தூய வாழ்வை, அறநெறி பிறழாத பண்பாடான வாழ்வை மேற்கொள்வதற்காக அல்லது தீய வழி செல்லாது நல்வழியிற் செல்வதற்காக, இவ்வாறு பல்வேறுபட்ட மனித இயல்புகளின் மகிமையை நிலை நிறுத்துவதற்காக, நாட்டில் சட்டங்கள் விதிகள் வகுக்கப்படுகின்றன. எமது மாண்புமிகு பிரதமர்கள், ஜனாதிபதிகள், அமைச்சர்கள் மது அருந்துவது தவிர்க்கப்படல் வேண்டுமென்று அறிவுரை கூறுவார்கள். இந்தக் காந்தீய வார்த்தைகளை இதுவரை எத்தனைபேர் ஏற்று குடிப்பழக்கத்தை விட்டிருக்கிறார்கள்? நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக ஒழுக்க நெறிக்கோவையும் தயாராவது அறியக்கிடக்கிறது.

இவ்விதம் எத்தனையோ ஒழுக்கநெறி அறிவித்தல்களை பொதுமக்களின் கவனத்துக்கு நிறுவனங்கள் திணைக்களங்கள் கொண்டு வந்தும், என்னபயன் இந்நாட்டில் உண்டாகிவிட்டது? 'ஊருக்குத்தான் உபதேசம்' என்றபடிதான் யாவும் கைகழுவி விடப் பட்டிருக்கின்றன. என்றுதான் எரிந்து விழவேண்டியிருக்கின்றது. இ.போ.ச. வை எடுத்துப்பார்ப்போமா? ஏனென்றால் பொதுமக்கள் அன்றாடம் சந்திக்க வேண்டிய சாதனம் அதுதானே! 'புகைத்தல் தவிர்க்கப்பட்டுள்ளது' இப்படி அறிவித்தல் மூன்று மொழிகளிலும் சில பேருந்துகளில் தனியே அரச கரும மொழியில் மாத்திரம் பொறிக்கப் பட்டுள்ளது அல்லவா? பேருந்துகளில் புகைத்தல் தகாது தவிர்க்கப் பட்டுள்ளது. அப்படி மீறிப்புகைப்பவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற இ.போ.ச. சபையார் நாட்டுமக்களுக்கு மன்னிக் வேண்டும் பஸ் பிரயாணிகளுக்கு எச்சரிக்கை விடுத்த போது எவ்வளவு பேருவகையாக இருந்தது....! ஆனால் அந்த மகிழ்ச்சிகளையெல்லாம் நிரந்தரமாக்குவதற்கு இந்த பொதுமக்கள் விடுகிறார்களில்லையே...! பொதுமக்கள் என்று கூறும் போது பிரயாணிகளைத் தான் குறிப்பிடுகிறேன். அதிலும் புகை பிடிக்கின்ற பிரயாணிகளைத்தான் குறிப்பிடுகிறேன். அறிவித்தலைப் பார்த்தும் பேருந்துகளில் புகைப்பது தவிர்க்கப்பட்டுள்ளது என்று அறிந்தும் எவ்வளவு தைரியமாக அநாவசியமாகப் புகைக்கிறார்கள். பல பிரயாணிகள்! இவர்களையிட்டு என்ன அபிப்பிராயம் கூறுவது? படிக்காதவர்கள் என்று வகை கூறினால் படித்தவர்களும் பற்றவைக் கிறார்களே! அப்படியானால் சுகவாசிகள், சுயநலவாதிகள், விறைத்தலையர்கள் அல்லது உலுத்தர்கள், சட்டவிரோதிகள் என்று சொல்வதா? புகைப்பதினால் மற்றவர்கள் மடிவதில்லை(?) மாறாக அவர்கள் தங்கள் ஆயுளையே குறைத்துக் கொள்கிறார்கள். இந்த உண்மையைப் பலர் அறிந்தும் புகைக்கிறார்களே! இவர்கள் புகைப்பதனால் மற்றவர்களுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்களைச் சற்றும் உணர்கின்றார்களில்லையே! ஒரு பஸ்சில் 68 அல்லது 58 என்றபடி பிரயாணிகள் ஏறலாம் என்றிருந்தும், அந்த விதிகளுக்கு முரணாக 'கொண்டக்டர்' கொட்டில்களில் மாடுகளை அடைப்பதுபோல் அடை அடையென்று எழுபது எண்பது பேர்களை வழிய வழிய அடைத்து பிரயாணிகள் வியர்த்து விறுவிறுத்து பேச்சுமூச்சற்று அவதியுற்று பிரயாணம் செய்கையில் நாலாபக்கங்களில் இருந்தும் சுருட்டுப் புகையும், சிகரட் புகையும். பீடிப்புகையும், சில வேளைகளில் கஞ்சாப் புகையும் ஈவு இரக்கமற்ற 'பிரமாக்களின்' வாய்களிலிருந்தும் பிறந்து விஸ்வரூபமெடுத்து முட்டி மோதியபடி நிற்கும் பிரயாணிகளின் மூக்கில் புகுந்து மயக்கத்தை அல்லது அருவருப்பை அல்லது புகைத்தலால் ஏற்படுகின்ற குமைச்சலை ஏற்படுத்துவதை அறிவுடையவர்கள் விரும்புவார்களா?

ஆனால் பிரயாணிகள் பிரயாண நெருசலால் திக்குமுக்காடும் போதும் சொகுசாக ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டு புகை ஊதித்தள்ளி அடுத்தவர்களுக்கு இடைஞ்சல் கொடுக்கிறார்கள்....! இது என்ன மனசாட்சி? இதை யாராவது பொதுமக்கள் அதாவது புகைபிடிக்கா தவர்கள் சுட்டிக்காட்டினால், அவனோடு மல்லுக்குப் போய் விடுகிறார்கள். புகைபிடிக்கும் 'மகாத்மாக்கள்' பலர் 'உன் வேலையை நீ பார்' என்று...! இவர்கள் இப்படிச் சொல்வதற்கு காரணம் இல்லாமலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இல்லை. விதிகளை அமுல் நடத்த வேண்டிய நடத்துனரும், சாரதியுமே புகைபிடிக்கும் பிரயாணிகளிடம் நெருப்பு வாங்கி புகைமூட்டும் போது அறிவித்தலைச் சுட்டிக்காட்டி 'போர்க்கொடி' நடத்த முன்வரும் புண்ணியவான்களுக்கு ஒருவேளை அடிகிடைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏன் இந்த வம்பு என்று படித்தவர்கள் பண்பானவர்கள் பல்லைக்கடித்துக் கொண்டு பேசாமல் போய்விடுகிறார்கள். இவர்கள் பற்றும்போது சுருட்டிலிருந்து சிகரெட்டிலிருந்து தீப்பொறி பறந்து எத்தனை உயர்ந்தரக சேலைகள், சேட்டுக்கள் எரி தடம் பட்டிருக்கின்றன என்பது பொய்யுமல்ல! கற்பனையுமல்ல. தீப்பொறி பறந்து எத்தனையோ பிரயாணிகளின் கன்னங்களும் சுடுபட்டிருக்கின்றன என்பது பொய்யுமல்ல. கற்பனையுமல்ல. அழகான வனிதையரின் பட்டுக்கன்னத்தில் தீப்பொறிபட்டு காயமும் அதனால் தழும்பும் உண்டாகுமானால் அவர்களின் இதயம் என்ன பாடுபடும்? எதிர்காலம் என்ன ஆகும்? இதையெல்லாம் இந்த புகைபிடிக்கும் கனவான்கள் பஸ்சில் புகைபிடிக்கும் பிரயாணிகள் உணர்ந்து திருந்தமாட்டார்களா? இ.போ. சபையின் அறிவுறுத்தலுக்கு மதிப்பளிக்க மாட்டார்களா? ஒரு சட்டத்தின் விதியின் மதிப்பு மக்கள் அதை அமுல் நடத்திக் காட்டும் போதுதான் உலகுக்குப் புரியும்! சட்டத்தை விதியை கொட்டை எழுத்துக்களில் பொறித்து விட்டால் மட்டும் போதாது. அதற்குரியவர்கள் அவற்றை அமுல் செய்திடத் தங்களை நம்பிக்கையோடு அர்ப்பணிக்க வேண்டும். திருட்டைப் பிடிக்க வேண்டிய பொலிஸாரே திருடுவது கூடாது. சினிமா பார்க்கக்கூடாதென்று மாணவர்களுக்குப் போதிக்கும் ஆசிரியர்கள் சினிமா பார்க்கக் கூடாது. மது அருந்தக்கூடாது. என்று கூறுகின்ற போதகரே மது அருந்தக்கூடாது. அது போல புகைபிடிக்கக் கூடாது. என்று தட்டிக்கேட்க வேண்டிய பஸ் நடத்துனர், சாரதிகளே கடமை நேரத்தில் புகைபிடிக்கவும் கூடாது. மற்றவர்களை அவ்வாறு செய்யவும் அனுமதிக்கவும் கூடாது. இ.போ.சபை இது தொடர்பாகக் கண்டிப்பான உத்தரவை பேரூந்துப் பொறுப்பாளிகளுக்கு வழங்க வேண்டும். புகைத்தலுக்கு உடந்தையாக இருக்கும் பஸ் ஊழியர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கும் எச்சரிக்கை விடப்படல் வேண்டும். இல்லாவிட்டால் இ.போ.ச. அதாவது 'இதில் போனால் சங்கடம்' என்ற முடிவிற்கு பொதுமக்கள் வந்து விடுவார்கள். மகா சனங்களே! புகைபிடிக்காத பிரயாணிகளே! நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் நான் சொல்லுவது சரிதானே...?

- மாஸ்டர் மாணிக்கம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை...!



மனித உரிமை போற்றுவோம்
மனித உரிமை போற்றுவோம்
மனித உரிமை மறுத்திடும்
மனிதர் களைச் சாடியே (மனித)

சட்டம் நீதி என்பதெல்லாம்
சகலருக்கும் பொதுமையாம்
துட்டர் கூட்டம் போடுமாட்டம்....
தொலைந்து போக மண்ணிலே...!(மனித)

ஆணும் பெண்ணும் சரிநிகராய்
ஆற்றலிலே உயரவே
பெண்ணும் ஆணும் சமத்துவமாய்
விண்ணை ஆய்வு செய்யவே (மனித)

வன்முறைக்கு விடைகொடுத்து
வாழும் வகை தேடியே...
அன்பினாலே உலகையாள
ஐக்கியமாய்க் கூடியே (மனித)

அடுத்தவரை வருத்துகின்ற
ஆக்கினைகள் அகலவே...
கெடுதிசெய்து ஆளுவோர்கள்
குவலயத்தில் ஒழியவே (மனித)

உயிர்களுக்கு ஊறுசெயும்
உலுத்தர்களை உதறியே
தூய்மையோடு மனிதநேயம்
துலங்கும்வகை காட்டியே (மனித)

ஒன்றையொன்று அடக்கியாள
உரிமையில்லை உலகிலே
என்றநீதி வெல்லுமெனில்
மனிதஉரிமை நிலைக்குமே (மனித)

– மணிக்கவிராயர் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சேமிப்புத் திட்டம்

கூட்டுறவு இயக்கமானது கூட்டுறவின் தன்மையை அங்கத்தவர்களிடையே உருவாக்குவதன் முக்கியமான தேவைப்பாடு பின்வருவனவாக எடுகோள் செய்யப்பட்டது.

01. அன்றாடம் உழைத்து வாழ்க்கை நடாத்துகின்ற பாட்டாளி மக்கள் தேவையற்றனவுக்கான செலவுகளை கட்டுப்படுத்தவும், அதாவது கோரிக்கைகள். ஆடம்பர பொழுது போக்கு போன்றவற்றை தவிர்த்து நல்ல சுகவாழ்வுக்கான அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்வதுடன், உழைப்பின் ஒரு பகுதியை மீதப்படுத்தலாகும். எனவே இச்சிக்கனமான செயற்பாடும் அதன் மூலமான சேமிப்பு பழக்கமும் ஏற்படுகின்றது. தொடர்ச்சியாக உழைப்பவர்கள் வாரத்தில் ஒரு நாள் ஓய்வு பெறுவதும் அந்நாளுக்கு தேவையான செலவை செய்வதற்கும் எதிர்பாராமல் ஏற்படும் அத்தியாவசிய செலவுகளுக்காகவும் தேவைப்படும் பொருளை அல்லது பணத்தை சேமிப்புச் செய்தல். இந்நிகழ்வு ஒரு வரன் முறையாக இடம்பெறும் போது இச்சிக்கன சேமிப்பு பழக்கமானது தாமாகவே மக்கள் பழக்க வழக்கமாக மாறிக்கொண்டது. எடுத்துக் காட்டாக வீட்டுத் தலைவியானவள் நாளாந்தம் சமையல் செய்யும் போது ஒரு படி அரிசியில் ஒரு பிடி அரிசியை எடுத்து மீதப்படுத்துவது போல் சேமிப்புப் பழக்கமானது வளரத்தொடங்கியது. காலப்போக்கில் சேமிக்கப்படும் தொகை தனி ஒருவரது அத்தியவசியத் தேவைக்கு ஈடுகட்ட முடியாத ஒரு நிலை தோன்றிய நிலைகளில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக சிக்கன சேமிப்பு நடைமுறையை ஏற்படுத்துவதாக சிக்கன சேமிப்பு கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டு சிக்கன, சேமிப்பு வளர்ச்சி பெறத் தொடங்கியது. இதே நேரம் குறித்த ஒரு அங்கத்தவருடைய தேவைப்பாட்டுக்கான நிதி உதவிகள் சிறிய இலாபம் கருதி குறுகிய கால மீளளிப்பு நடைமுறையில் வழங்கப்பட்டது. இச்சிறிய இலாபமானது இரண்டு விதமான அடிப்படை நோக்கங்களைக் கொண்டதாக இருந்தன.

2. நிதி உதவி பெற்றவர் உரிய காலத்தில் செலுத்துவதற்கான ஒரு கட்டுப்பாட்டுச் செலவு காலம் தாழ்த்தப்படும் பொழுது இச்செலவு அதிகரிக்கப்படலாம்.

3. சிக்கன சேமிப்பு செய்யும் அங்கத்தவர்களுக்குள ஊக்குவிப்பாக வழங்கப்படும் உதவு தொகை அதாவது மேல் மிகை வருமானமாகக் கொள்ளலாம். அல்லாமலும் சங்க செயற்பாடுகள் தொடர்பான பதிவுகள், பதிவேடுகள், ஆவணங்கள் போன்றவற்றுக்கான செலவும் இதன் மூலம் ஈடுசெய்யலாம். காலப்போக்கில் நிதி உதவிகள் யாவும் கடன் உதவித்திட்டங்களாக வகுக்கப்பட்டு தேவை கருதி கடன் பகுப்பாய்வு செய்யப்பட்டு கடன்களின் வகைக்கும் காலத்திற்கும் ஏற்ப இலாபவீதமானது கணிக்கப்பட்டது. அதாவது அபிவிருத்தி நோக்கங்கள் கொண்டவற்றுக்கான வீதத்திற்கும் நுகர்ச்சி போசாக்கு தேவைக்கான கடன்களுக்கான இலாப வீதத்திற்கும் சற்று வித்தியாசமான ஏற்ற இறக்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டதுடன், மீளப்பெறும் கால அளவு தேவைகளின் தன்மை கருதி மாறுபட்டு காட்டப்பட்டது. காலப்போக்கில் கடன் வழங்கல் நடைமுறையாக பரிணமித்துள்ளது.

கூட்டுறவின் மூலமான சிக்கன சேமிப்பு நடவடிக்கைகளை வளர்த்து அதன் மூலமாக பெறப்பட்ட முதலை ஆரம்ப முதலீடாக வைத்து அங்கத்தவர்களிடையே ஏற்படுகின்ற பொருளாதார சிக்கல்களுக்கு தீர்வு காணப்படும் ஒரு நோக்கமாக கடன் வழங்கல் நடைமுறை நடைபெறுகின்றது.

1. சேமிப்பு பழக்கமானது வளர்ச்சியின் அடிப்படையில் தற்பொழுது சங்க மட்டத்தில் பல்வேறு விதமான சேமிப்புக்களாக உருவாக்கப்பட்டுள்ளது.

**அ. சாதாரண சேமிப்பு**

இச்சேமிப்பு ஒருவர் தன்னால் சேமிக்கக்கூடிய தொகையை காலத்துக்கு காலம் கட்டி வருவதாகவும், அவசிய தேவை கருதி குறிப்பிட்ட ஒரு தொகையை கோரி மீளப்பெறலாம். தற்பொழுது வளர்ந்து வரும் நிலையில் இத்தகைய சாதாரண சேமிப்புக்களுக்கு மீளப்பெறும் காலம் வரையறை செய்யப்பட்டதுடன் அதாவது ஒரு தடவை மீளப்பெறும் தொகை சேமிப்பின் 50% க்கு மேற்படாமல் இருப்பதுடன் மறுதடவை பணம் மீளப்பெறுவதாயின் குறித்த ஒரு காலம் (6 மாதம்) தாமதித்திருக்க வேண்டும். இலாப வீதமானது மாதாந்த சராசரி இருப்புக்கு கணக்கிடப்படும்.

**ஆ. கட்டாய சேமிப்பு**

இச்சேமிப்பானது ஒவ்வொரு மாதமும் அங்கத்தவா ஒருவர் ஒரு குறித்த தொகையை சேமிப்பில் வைத்தலாகும். இக்கட்டாய சேமிப்பு அங்கத்துவம் முடிக்கப்படும் போது அல்லாமல் இடையில் மீளளிக்கப்படுவதில்லை. இதற்கான இலாபவீதம் வருட முடிவில் இருக்கும் தொகைக்கு விகிதாசார அடிப்படையில் கணித்தல் சேமிப்பு பழக்கத்தை விரிவுபடுத்த இத்திட்டம் சாலச் சிறந்ததெனலாம்.

**இ. முதலீட்டுச் சேமிப்பு**

ஒரு குறித்த காலம் வரை (6 மாதங்கள் சராசரி தொகை) தொகை ஒன்று மாதம் மாதம் சேமித்தலும் ஆண்டு தோறும் இலாப வீதம் கணிக்கப்பட்டாலும் 60 மாத முடிவில் சேமிப்புடன் சேர்ப்பதுடன் அதனை அடிப்படையாக வைத்து கடன் வசதிகள் வழங்கல் ஏனைய தேவைகளுக்கு நிதி வழங்கல் 60 மாத காலத்தின் பின்னர் சாதாரண சேமிப்பாக இது பேணப்படும். முதலீட்டுச் சேமிப்பு ஊடாக வழங்கப்படும் கடன் உதவிகள் இச்சேமிப்பின் அடமானமாக வழங்கப்படும். பொதுக் கடனுக்கான செலவானது குறைவாக காணப்படும் சாதாரணமாக அறவிடப்படும் கடன் செலவு விகிதத்தில் ஆறில் ஒரு பகுதி (1/6) சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்படும். பொருளாதார அபிவிருத்திக்கு இது மிகவும் ஆக்கபூர்வமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. நிலையான வைப்பு

குறித்த ஒரு தொகை (ஆயிரங்களில்) குறித்த ஒரு காலத்திற்கு நிலையான வைப்பில் இட்டு அக்கால முடிவில் அதற்கான இலாபத் தொகையுடன் வைப்புடன் சேர்த்தல், அனேகமாக சங்கங்கள் 1/2 வருடங்கள் 1 வருடம் என்ற கணக்கில் காலம் கணிக்கப்படும். 1வருட வைப்பாக வைக்கப்படும் தொகையானது வருட முடிவில் குறிக்கப்பட்ட இலாப வீதத்துடன் மீள்வைப்பாக சேர்க்கப்படும். நிதி பாவனையின் தன்மைக்கு ஏற்ப வைப்புக்களின் இலாப வீதம் புதுப்பிக்கப்படும் நேரத்தில் மாற்றம் அடையும். இந்நிலையான வைப்பை பொறுப்பாக வைத்து ஒரு குறித்த தொகையை இடையில் கடனாகப் பெறலாம். கடனுக்காக பெறப்படும் செலவு வீதமானது இலாபத்திலும் பார்க்க 1 வீதம் அதிகமானதாக இருக்கும். குறிப்பாக சேமிப்புத் திட்டங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு அரிய பெரிய பங்களிப்பை வழங்குகிறது என்பது உண்மையாகும்.

ஏ.எல். ஆதம்பாவா (M.A.)
சிரேஷ்ட எண்பார்வையாளர்
கூட்டுறவு அலுவலகம்,
கல்முனை.



## Peace Process



Norway, Norway
Continue your Peace
Process with hope
War and Violence
Damage our nation
By ugly Politicians
No way to follow
Human Rights
In this democratic
Country! Therefore
Norway, Norway
Continue your Peace
Process with Hope
Proceed and Succeed
As People are in danger.

*By: Nonis*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடந்தது அவலமான சங்கதி - ஆனால் - நடக்கக்கூடாது இனி இக்கதி

| பிரதேச செயலாளர் பிரிவு | முகாம்களின் எண்ணிக்கை | இடம்பெயர்ந்தோர் விபரம் 20.03.2007 வரை | | | | | | | | மொத்தக் குடும்பங்கள் | மொத்த தனிநபர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | திருக்கோணமலையிலிருந்து இடம்பெயர்ந்தோர் | | | | மட்டக்களப்புக்குள் இடம்பெயர்ந்தோர் | | | | | |
| | | முகாம்களில் தங்கியிருப்போர் | | உறவினர் வீட்டிலுள்ளோர் | | முகாம்களில் தங்கியிருப்போர் | | உறவினர் வீட்டிலுள்ளோர் | | | |
| | | குடும்பங்கள் | தனிநபர்கள் | குடும்பங்கள் | தனிநபர்கள் | குடும்பங்கள் | தனிநபர்கள் | குடும்பங்கள் | தனிநபர்கள் | | |
| 1. கோரளைப்பற்று வடக்கு | 4 | 92 | 292 | 1 | 3 | 1178 | 3978 | 11 | 35 | 1292 | 4278 |
| 2. கோரைளைப்பற்று | 3 | 241 | 804 | 276 | 967 | 40 | 237 | 1028 | 3840 | 1583 | 5848 |
| வேறு | | | | | | | | 6 | 15 | 6 | 15 |
| 3. மண்முனை வடக்கு | 31 | 1800 | 6532 | 223 | 737 | 3140 | 11417 | 4796 | 16043 | 9959 | 34729 |
| 4. கோரளைப்பற்று தெற்கு | | | | 7 | 23 | | | 1952 | 7818 | 1959 | 7841 |
| வேறு | 3 | | | | | | | | | 764 | 2715 |
| 5. ஏறாவூர்பற்று | 17 | | | | | | | | | 6214 | 23057 |
| வேறு | | | | | | | | | | 3127 | 12213 |
| 6. காத்தான்குடி | | | | 6 | 26 | | | | | 6 | 26 |
| 7. போரதீவுப்பற்று | 1 | | | | | 10 | 30 | 840 | 3189 | 850 | 3219 |
| 8. மண்முனை தெற்கு ஏறாவூர் | 13 | 174 | 610 | 491 | 1652 | 3410 | 15316 | 5934 | 24097 | 10009 | 41685 |
| 9. மண்முனைப்பற்று | 21 | 344 | 1205 | 59 | 214 | 3149 | 12267 | 2210 | 8829 | 5782 | 22515 |
| 10. கோரளைப்பற்று கிழக்கு | | | | 4 | 7 | | | | | 7 | 7 |
| 11. கோரளைப்பற்று மத்தி | | | | 12 | 45 | | | 67 | 257 | 79 | 302 |

கிழக்கை மீட்கும் யுத்தத்தின் காரணமாக தமது வாழ்விடங்களை விட்டு அகதிகளாக அல்லல்பட்டு வெளியேறிய தமிழ்க்குடும்பங்களின் விபரங்கள் இவை. தகவல்: ''மட்டக்களப்பு மாவட்டச் செயலகம்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்

''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பார்கள்! அது பழைய கதையாகிவிட்டது. ஏனெனில் வீதிக்கு வீதி தெருவுக்கு தெரு கோயில்களை கட்டிய மனிதன் கண்ணியமாக கூடி வாழ்வதை மறந்து விட்டான். சந்திர மண்டலத்தில் சாலைகள் அமைத்து செவ்வாய்க் கிரகத்தில் குடியேற நினைக்கும் மனிதன் கூட்டுறவை மறந்து இன்றயை காலத்தில் தனித் தனியே தனது சுயலாபத்திற்காக செயற்படும் சிறு மனிதனாகிவிட்டான்.

நேற்றைய மனிதனின் வாழ்வில் கூட்டுறவே அவனது வாழ்க்கை யோட்டத்தை தீர்மானித்தது. இதன்படியே கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறையை அனுபவித்தான். அதனை மேலும் பலப்படுத்த கோயில்களை அமைத்து கிராமத்துக்கும் கிராமத்துக்கும் கூட்டுறவை பேணும் வழிவகைகளை செய்து வைத்தான். இந்தக் கூட்டுறவின் மூலமே பல செயற்கரிய காரியங்களை செய்து முடித்த வரலாற்றில் இடம்பிடித்து விட்டான்.

மனிதர்களிடம் கூட்டுறவு எங்ஙனம் சீரழிந்துவிட்டது என்பதை நாம் பறவைகளையும், விலங்குகளையும் பார்த்து கற்கவேண்டியுள்ளது. இதனையே ஒரு கவிஞர்.

"ஒண்ணா இருக்க கத்துக்கணும்
இந்த உண்மையைச் சொன்னா ஒத்துக்கணும்
காக்கைக் கூட்டத்த பாருங்க....
அதுக்கு கத்து கொடுத்தது யாருங்க"

என கேள்வி கேட்கின்றார். எனவே காக்கைகளிடம் காணப்படும் கூட்டுறவு கூட எம்மிடையே சீரழிந்துவிட்டது என்பதே இப்பாடலின் மறை பொருள் தத்துவமாகும்.

நாம் எத்தனையோ பத்திரிகைகளிலும் தொலைக்காட்சிகளிலும் பல செய்திகளை காண்கிறோம். நாய் ஒன்று புலிக்குட்டிக்கு பால் ஊட்டி வளர்ப்பதையும், எலியும், பூனையும் நண்பர்களாய் பழகுவதையும் இந்த நவீன காலம் ஏற்படுத்தியுள்ளது. ஆனால் மனிதனிடம் கூட்டுறவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. அயல் வீட்டாருடன் கூட்டுறவு இல்லை. சொந்த கிராமத்தோடு கூட்டுறவு இல்லை. இதனால் ஏற்பட்டது என்ன? மண்டையோடு இல்லா மனிதனின் மரணித்துவிட்ட சடலங்களே!

இதற்கு சாதாரணமான ஓர் ஊரை எடுத்துக்கொண்டால் அங்கு வாழும் மனிதர்களிடையே கூட்டுறவு நல்ல முறையில் பேணப்படுமாயின் அங்கு கூட்டு முயற்சிகள் இடம்பெறும். உதாரணமாக கல்வி உயர்வு நிலையை அடையும், சுகாதாரம் பேணப்படும். மொத்தத்தில் வருவாய் அதிகரித்து வாழ்க்கைத்தரம் உயர்வடையும். கிராமிய வாழ்க்கை முறையில் கூட்டுறவு சமூக நடைமுறையில் பேணப்படுகின்றது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக மரண வீடுகளில் சொந்தம் பந்தம் சுற்றத்தார் அனைவரும் ஒன்றுகூடி அந்த துக்கத்தில் பங்குகொண்டு அந்த வீட்டுக்காரரின் மனநிலையை சீர் செய்யும் நிலைமைகளைச் செய்வர். இதுவும் நட்புறவின் மூலமான ஓர் கூட்டுறவே ஆகும்.

கூட்டுறவை மையப்படுத்திய பழ மொழியில் எவ்வளவோ உண்மை பொருந்தியிருப்பதை நாம் அவதானிக்கலாம். அதாவது எமது பெரியவர் "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" எனக்கூறுவர். இதை விளக்கும் கதையொன்றை கூறலாமென்று நினைக்கின்றேன். ஓர் குடும்பத்தில் அண்ணன் தம்பி என நால்வர் இருந்தனர். அவர்களிடையே ஒற்றுமையிருக்காத காரணத்தினால் எதிரிகள் அவர்களை தனித்தனியே இலகுவாக தாக்கினர். இதைக்கண்ட ஓர் பெரியார் நால்வரையும் ஓர் இடத்தில் அழைத்து நால்வருக்கும் ஒவ்வொரு தடிகளை கொடுத்து அதனை வளைக்கும்படி சொன்னார். அவர்கள் அதனை மிகவும் இலகுவாக வளைத்தனர். பின் இரண்டிரண்டு தடிகளைக் கொடுத்து வளைக்கச் சொன்னார். சற்றுக்கடினப்பட்டு அதனை நால்வரும் வளைத்தனர்.

பின் மும்மூன்று தடிகளைக் கொடுத்து வளைக்கச் சொன்னார். அதனை மிகவும் கடினமான நிலையில் வளைத்தனர். பின் நன்நான்கு தடிகளை வளைக்கச் சொன்னார். அதனை வளைக்க முற்பட்ட நான்கு பேரும் வளைக்க முடியாமல் தடுமாறினர். இதைக்கொண்டு அப்பெரியார் "நீங்கள் நான்கு பேரும் ஒன்றாகவும் கூட்டாகவும் செயற்பட்டால் யாருமே உங்களை வெல்லமுடியாது" என்று சொன்னார்.


அவ்வாறு நான்குபேரும் தமது தவறை உணர்ந்து ஒன்றாகச் செயற்பட்டு பல துறைகளிலும் வெற்றி கண்டு மகிழ்ந்தனர். எனவே நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் ஒன்றாக சேர்ந்து உழைப்பைப் பகிர்ந்து கொண்டால் எந்தத் துன்பமும் நமக்கில்லை. யாருடைய நிதியிலோ அல்லது வேறு நாடுகளின் உதவியிலோ வாழத் தேவையில்லை. நமது உழைப்பும் முயற்சியும் போதுமானதாக இருக்கும். ஆனால் மனிதனாகிய நாம் சுயஇலாபத்தினடிப்படையில் செயற்பட முற்படுவதால் சொந்த இலாபத்தையும் அடையமுடியாமல் பொது இலாபத்தையும் அடைய முடியாமல் வாழ்க்கையும் வாழ்க்கைத்தரமும் கீழ் நோக்கியே செல்வது நாம் அறிந்த உண்மையாகும்.

இரண்டாம் உலகப்போரில் படை ஆயுதம் என பல்வேறு பலத்தை, ஜேர்மன், பிரிட்டிஷை விட மிக அதிகமாக கொண்டிருந்தது. பிரிட்டிஷ் ஆயுத பலத்தில் ஜேர்மனை விடக்குறைவான பலத்தைக் கொண்டிருந்தாலும், பிரிட்டிஷ் மக்களிடையே ஒரு பலமான கூட்டுறவு இருந்தமையினால் ஜேர்மன் பல சேதங்களை பிரிட்டிஷுக்கு இழைத்த போதும் ஜேர்மனன் பிரிட்டிஷுக்குள் கால் வைக்கமுடியாமல் பின்வாங்கச் செய்து பிரிட்டிஷ் மக்களால் விரட்டியடிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வானது சாதாரணமான ஓர் ஊருக்கும் பொருத்தமானதாகும். அங்கு கூட்டுறவு இல்லையாயின் கல்வி பொருளாதாரம், சுகாதாரம் நிம்மதியான வாழ்வு என்பன இல்லாமலே இருக்கும். இதனாலேயே கூட்டுறவு இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்கின்றனர். ஏனெனில் அங்கு என்னதான் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொண்டாலும் மக்களிடையே கூட்டுறவு இல்லையாயின் அது தோல்வியிலேயே முடியும். எனவே ''கோயில் இல்லா ஊரில் குடியிருந்தாலும் கூட்டுறவு இல்லாத ஊரில் குடியிருப்பது வில்லங்கமான விடயமாகவே இருக்கும்''




"Geoffrey Moss"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவில் காண்போம் சமாதானம்

'கூட்டுறவே நாட்டுயர்வு' என்பது முதுமொழி. கூட்டுறவின் மகிமை ஏட்டில் எழுத அடங்காது. பலர் ஒருவருக்காகவும் ஒருவர் பலருக்காகவும் உழைப்பதே கூட்டுறவின் கருத்தாகும். தனிப்பட்டவர் சமூக நலன் கருதியும், சமூகம் தனிப்பட்டவர் நலன் கருதியும் உழைப்பதன் மூலமாய் முதலாளித்துவக் கொள்கையின் பயனையும் சமதர முதலாளித்துவக் கொள்கையின் பயனையும் கூட்டுறவு பெற்றுத் தருகின்றது. ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் உள்ளவர்கள் அனைவரும் ஒரு பொது இலட்சியத்தை அடைவதற்காகவே பாடுபடும் போது தமக்குத் தாமே உதவி செய்து கொள்ளும் போது அங்கு சமாதானம் தானாகவே உருவாகின்றது. கூட்டுறவுச் சங்கமானது தன் அங்கத்தவர்கள் முன்னேற்றம் கருதிக் கருமமாற்றுகின்றது. இதன் மூலம் மக்களுக்கிடையே சுய உதவி. சிக்கன வாழ்வு, சகிப்புத் தன்மை போன்ற நற்பழக்கங்கள் வளர்ந்து வருகின்றது. இதனைச் சுருக்கமாகக் கூறுவோமாயின்,

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு எம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வே" என்ற பொன் மொழியின் உட்கருத்தை கூட்டுறவில் மலரும் சமாதானம் கொண்டு விளங்குகின்றது எனலாம். இன்றைய உலகில் கூட்டுறவு பரவாத இடமேயில்லை. வாழ்க்கையில் சகல துறையிலும் கூட்டுறவின் தத்துவம் உணர்த்தப்படுகின்றது.

உதாரணமாக எடுத்துக் கொண்டால் பெற்றோர் பிள்ளைகள் எனக்கூடி வாழ்ந்து வாழ்க்கையைச் சிறந்ததாக்கிக் கொள்ளலாம். தனித்து வாழ்வதை விட கூட்டுறவால் இங்கு சமாதானம் மலர்கின்றது. தனித் தனியே வாழும்போது பல பிரச்சினைகள் ஏற்படுவதை சாதாரணமாகவே கண்டு கொள்ளலாம். ஒருவருக்கொருவர் திட்டமிட்டுப் பங்கிட்டு செயலாற்றுவதிலே வாழ்வில் இன்பம் கிடைக்கின்றது. முற்காலத்தில் வீடுகளில் கூட்டுறவு காணப்பட்டதால் அங்கு வாழ்க்கையில் இன்பமும் சமாதானமும் பொங்கி வழிந்தோடியது. ஆனால் காலஞ்செல்லச் செல்ல தனிக்குடித்தனம் என்ற பெயரில் கூட்டுறவு வாழ்க்கை சிதறிவிட்டது. கூட்டுறவு வாழ்க்கையில் கிடைக்கும் பல நன்மைகள். தனி வாழ்க்கையில் கிடைப்பதில்லை. இதே போன்று நம் நாட்டிலும் காணப்படும் நிலை கூட்டுறவாகச் செயற்பட்டிருந்தால் நாம் இன்று எவ்வளவு சமாதானமாக வாழ்ந்திருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்பார்கள். அதாவது தனித்துச் செயற்படுவதை விட ஒன்றுபட்டுச் செயற்படுவது உறுதியையம் பயனையும் நம்பிக்கையையும் வளர்க்கும் என்பதையும் அது உணர்த்துகின்றது.

ஒவ்வொரு மனிதனும் குணத்தாலும், அறிவாலும், திறமையாலும் வேறுபடுவது போல் இன்று நிறத்தாலும் மதத்தாலும், இனத்தாலும் வேறுபடுகின்றனர். இதனால் அதிகாரம், அகம்பாவம், தாழ்வுச் சிக்கலும் மனிதனை ஆட்டிப்படைகின்றது. இத்தகைய நிலைதான் இன்று யுத்தத்திற்கும் அழிவிற்கும் அடித்தளமாய் அமைந்துள்ளது என்றால் மிகையாகாது.

நமது வீட்டிலும், சமூகத்திலும், நாட்டிலும் கூட கூட்டுறவையும், புரிந்துணர்வையும் செய்வதன் மூலம் மனித விழுமியங்கள், அன்பு, பண்பு, ஒழுக்கம். விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, சகிப்புத்தன்மை மற்றும் பெருந்தன்மை போன்ற பண்புகளைக் கட்டியெழுப்புவோமானால் கூட்டுறவில் சமாதானமும் தன்னம்பிக்கையும் மலரும். இத்தகைய சமாதானம் நிரந்தரமாகவும், உண்மையாகவும் மிளிரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எனவே மாணவர்களாகிய நாம் கூட்டுறவு வாழ்க்கை வாழ்வோமானால் எம்மத்தியில் சமாதானம் மலரும்.

**செ. தாட்சணி**

## மனித மாண்பு

எண்ணமும் எழுத்தும் எல்லா
இனத்தவர் சொல்லுஞ் செயலும்
திண்ணமாய் மனித வாழ்வில்
திறம்பட மிளிரச் செய்யும்
வண்ணமாய்த் துலங்கும் காலம்
விரைந்திட வேண்டு மிந்த
மண்ணிலே மனித மாண்பு
மேலோங்கித் திகழ வேண்டும்!

~ மணிக்கவிராயர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு வெறும் பேச்சளவில்!

கூட்டுறவு என்பது குறிப்பிட்ட ஒரு கொள்கையின் கீழ் ஒன்றிணைந்த மனித குழுக்களாக குறிப்பிடலாம். இவ்வாறான கூட்டுறவு, பல தாபனங்களாக காணப்படுகின்றது. அதாவது குடும்பம், சமூகம், அரசாங்கம், கல்வி போன்ற துறைகளாகக் காணப்படுவதனை நாம் நோக்கலாம்.

இன்று இவ்வாறான கூட்டுறவு நிலையங்கள் தமது செயற்பாட்டில் இருந்து விலகி வேறு நோக்கங்கள் கொண்டனவாகச் செயற்படுவதனை நோக்கலாம். அதாவது கூட்டுறவு எனும் பெயரினைச் சூட்டிக்கொண்டு சுயநலக் குழுக்களாக செயற்படுவதனை நோக்கலாம். அந்த வகையில் ஆரம்பக் கட்டமாக ஒரு குடும்பத்தில் கூட்டுறவு செயற்படும் விதத்தினை ஆராய்வோமாயின்..

நாம் பல கூட்டுறவுக் குடும்பங்களை கண்டுள்ளோம். அவ்வாறு காணாதவர்கள் திரைப்படங்களில் கண்டிருப்பார்கள். இத்தகைய கூட்டுக்குடும்பங்கள் ஆரம்பத்தில் மிகவும் நெருக்கமாகவும் எவராலும் பிரிக்கமுடியாத ஒற்றுமையுடனும் காணப்படும். சிறிது காலம் செல்லச் செல்ல பழகப் பழக பாலும் புளிக்கும் என்பதற்கமைய சிதைவடைந்து போவதைக் காணலாம். இவ்வாறான கூட்டுறவு செயற்பாடுகள் சிதைவடைவதற்கு முக்கிய காரணங்களாக பணம், சந்தேகமான உணர்வு, அதிகாரவெறி, பதவி ஆசை போன்றவற்றைக் குறிப்பிடலாம். அந்த வகையில் ஒரு குடும்பம் சிதைவடைகின்றது என்றால் அதற்கு சந்தேகமான உணர்வு, பணம் போன்ற பிரச்சினைகளே காரணமாக இருக்கலாம். இதன் மூலம் ஆரம்பத்தில் நடைமுறையில் காணப்பட்ட கூட்டுறவு பின்பு பேச்சளவில் மாறியிருப்பதை காணலாம். இதே போலவே

**சமூகத்தில்**

ஒரு சமூகத்தை எடுத்துக்கொண்டால் சமூகங்கள் பொது விடயங்களிலும் நிகழ்வுகளிலும் கூட்டுறவுடன் செயற்படுவதனை அவதானிக்கலாம். இவ்வுறவு நெடுநாள் நீடிக்காமலே தாமாகவே மறைந்து விடும். இங்கு கூட்டுறவானது வாய்ப்பேச்சோடு மறைந்து விடும். இதற்கு காரணம் விட்டுக்கொடுப்பின்மையாகும். அதாவது ஒருவரை ஒருவர் தாழ்த்தியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மை உயர்த்தியும் பேசிக் கொள்வதால் முரண்பாடுகள் தோன்றுகின்றது. அப்போது அச்சமூகத்தினால் திட்டமிடப்பட்ட கூட்டுறவு நிகழ்ச்சி ஊமை கண்ட கனவு போல செயலற்றுப் போய்விடும். இதே போல கல்வித்துறையை எடுத்துக்கொண்டால்

**கல்வியில்**

கல்வித்துறையில் கூட்டுறவுடன் செயற்படுவது மிக முக்கியமானதாகவும் அதாவது மாணவர்கள் கல்விசார் நடத்தையின் பால் ஈடுபடுத்துவதற்கும் இலகுவான முறையில் கல்வியை கற்றுத் தேர்வுதற்கும் கூட்டுறவு அவசியமானதாகும். ஆரம்பத்தில் கூட்டுறவின் மொத்த வடிவமே கல்வியின் வெற்றிப்படி எனப்பட்டது. ஆனால் தற்போது மாணவர்களுக்கிடையே போட்டி அதிகமாகக் காணப்படுவதுடன் ஒருவர் மேல் இன்னொருவர் வெறுப்புடன் நோக்குகையில் கல்வியில் கூட்டுறவு சிதைக்கப்பட்டு கூட்டுறவு என்பது தற்போது தனியுறவு எனும் நிலைக்கு மாணவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதே போன்று

**அரச துறையில்**

தற்போது நாட்டில் மிகவும் பிரச்சினையாக மக்கள் மத்தியில் மிளிறிக் கொண்டிருக்கும் அமைப்பாக அரசாங்கத்தை எடுத்துக் கொள்ளலாம். ஆரம்ப கால மக்கள் தங்களை நாட்டுக்காகவே அர்ப்பணித்தனர். அந்தவகையில் சேர் பொன் இராமநாதன், சேர் பொன் அருணாச்சலம், அநாகரிக தர்மபால, ஏ.ஈ. குணசிங்க போன்ற அரசியல் தலைவர்கள் கூட்டுறவாகச் செயற்பட்டு சுதந்திரத்தை வென்றெடுக்க முயற்சித்தனர். ஆரம்பத்தில் இவர்களது இம்முயற்சிகள் பலன் தருவனவாகக் காணப்பட்டாலும் கூட, ஆரம்பத்தில் கூறியது போல கூட்டுறவின் எதிரிகளான பணம், அதிகாரம், பதவி போன்ற துஷ்ட சக்திகள் இக்கூட்டுறவினை கலைக்க முற்பட்டது. இதன் கொடூர முயற்சியானது 1933ம் ஆண்டு நிறைவேறியது. அதாவது எமது இலங்கையில் சாதி, மத பேதமின்றி கூட்டுறவாகத் தொழிற்பட்ட இலங்கைத் தலைவர்களுக்கிடையில் குறிப்பாக சிங்கள, முஸ்லிம் தலைவர்களுக்கிடையே வர்த்தகப் போட்டி காரணமாக முதலாவது போராட்டம் நடந்தது. அன்று ஏற்பட்ட அந்தக் கலவரம் பின்பு அதிகாரம், பணம், பதவி போன்றவற்றின் காரணங்களால் பிரிவடைந்து இன்று கூட்டுறவு என்றால் என்ன எனும் அளவிற்கு மாறியுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நாம் அரசியலில் கூட்டுறவினையோ அல்லது கூட்டு முயற்சியினையோ காண முடியாதுள்ளதனை அவதானிக்கலாம். அதாவது அரசியலில் இன்று கூட்டுறவு என்னும் பதம் மறைந்தே போய்விட்டதினை காணலாம்.

அரச தாபனங்களிலும் இவ்வாறான கூட்டுறவு எனும் பதம் ஒன்று தமிழில் உள்ளதா எனும் அளவிற்கு சந்தேகம் தரக்கூடிய வகையில் அவர்கள் நடந்து கொள்கின்றனர். அதாவது ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காத தன்மை தமது அதிகாரங்களை ஏனையவர்களுக்குப் புலப்பட வைக்க வேண்டும் என்ற நோக்கங்கள் காரணமாக இன்று அரச ஊழியர்கள் மத்தியில் கூட்டுறவு எனும் சொல் வாய்ப்பேச்சளவில் உள்ளது.

- துரையப்பா சாந்தகுமார் -






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மணி வாக்குகள்"



சிறுவர் நாங்கள்
நாளையத் தலைவர்கள்
ஆதலால்
சிறந்த பிரஜைகளாய்....
எங்களை, நீங்கள்
உருவாக்குங்கள்!



தீய பழக்கம் எதுவோ
அதை விட்டுவிடு...
இன்றேல்
உலகம் உன்னை
விட்டுவிடும்!

சமாதானத்தினால்
இயலாதது ஒன்றுமில்லை...
ஆனால் -
போரினால் நிலைத்தது
எதுவும் இல்லை!



அன்பு காட்டி வாழுங்கள்!
இதற்கு ஜாதி, இனம், மொழி
குலம், கல்வி, பணம், புகழ்,
கார், பங்களா, பதவி, பட்டம்
தேவையில்லை ! ஆபரணம்
ஆடம்பரங்கள் எதுவும்
தேவையில்லை - ஆனால் -
உங்கள் இதயத்தை மட்டும்
தூய்மையாக - உண்மையாக
அடக்கமாக - அமைதியாக
வைத்திருங்கள்!
பெரியோர் காட்டிய நல்வழி
இதுவே!







- ஞானக்கண்ணன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள இனமே!

ஒன்றாய் சமமாய் ஒற்றுமையாய்
ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளாய்
இணைந்து வாழ வழி செய்ய
உன்னால் முடியும் நிட்சயமாய்

சட்டம் நீதி முப்படைகள்
சர்வ வல்லமை ஆட்சிமுறை
திட்டம் தீட்டி இனப்பகையை
தீர்க்கும் யுத்தச் சிந்தனைகள்

தமிழை தமிழர் வாழ்விடத்தை
தொலைத்து ஒழிக்கும் தந்திரங்கள்
தமிழைப் பேசும் முஸ்லிம்கள்
தலைமையை நசுக்கும் சூழ்ச்சி வழி

ஒற்றையாட்சி மதச் சார்பு
இராணுவ வலயம் அடக்குமுறை
இற்றைவரைக்கும் ஒடுக்குமுறை
உங்கள் வசமாய் இருப்பதனால்.....!

ஆளும் இனமாய் அடுத்தோரை
அடக்கியாளும் அதிகாரக்
கொள்கைமாறா இனவெறியில்
கொடுமைசெய்யப் புறப்பட்டாய்....!

தொழிலை பொருளை தேசத்தை
துறந்து துயரப் படுகின்ற
தமிழர், நிலையை எண்ணிப்பார்...!
தர்மம் இதுவா எண்ணிப்பார்...!

கல்வி வளமும் - தொழில் வளமும்
புறக்கணிப்பற்ற சூழ்நிலையும்
தொல்லையில்லாச் சுதந்திரமும்
தடையில்லாமல் கிடைக்குமெனில்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதரவாஞ்சை இனவுறவு
சூழ்ச்சியில்லா(ப்) புரிந்துணர்வு
ஆதரவான படைமுகங்கள்
அனைத்தும் உயிராய் இருக்குமெனில்...

மனித உரிமை வாழ்கின்ற
மதச்சார் பற்ற நாடிதுவாய்...
இந்து முஸ்லிம் கிறிஸ்தவர்கள்
பௌத்தர்களுடனே கைகோர்த்தால்

சமநிலை தன்னால் உருவாகும்
சமத்துவம் முன்னால் குதித்தாடும்
சமர் இனமோதல் இல்லாத
சம(ா)தான மெங்கும் இனிதாகும்!

எனவே ஒன்றாய் - ஐக்கியமாய்
ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளாய்
இணைந்து வாழ எழுவாயா...
எனதரும் இனமே! சிங்கள இனமே!

❖❖❖

- "கவிநிலா" -

## ஹலோ...! உன்னைத்தான்....!




உனது நினைவை நம்ப வேண்டாம்
எதற்கும் எழுதி வைத்துக்கொள்

நீ செய்ய வேண்டியதை பட்டியலிட்டுக் கொள்
முன்னுரிமை கொடுத்து அவற்றைச் செய்!

உண்மை என்பது ஒன்றுமே இல்லை. அதை சரியாக புரிந்து கொள்ளாது விட்டால்! சரியாக தொடர்புபடுத்தப்படாது விட்டால்! சரியாக அர்த்தப்படுத்திக் கொள்ளாது விட்டால்!

உனது பணத்தை உன்னால் கணக்கிட முடியாது விட்டால் - நீ உண்மையில் பணக்காரனே அல்ல!

நீ கடன் கொடுத்தால் ஒன்று நீ உன் பணத்தை இழந்து விடுவாய் அல்லது ஒரு நண்பனை இழந்து விடுவாய்!

பணம் நல்ல நண்பர்களைப் பெற்றுத்தராது
ஆனால் எதிரிகளைப் பெற்றுத்தரும்!

~ சுடர் விழி ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரியுமா தூரம்? பயணம் போக...

அக்கரைப்பற்றிலிருந்து (கிலோ மீற்றரில்)



| | | |
|---|---|---|
| குமுனை | - | 86 |
| லகுகல | - | 58 |
| பாணம | - | 57 |
| பொத்துவில் | - | 43 |
| கோமாரி | - | 29 |
| திருக்கோவில் | - | 11 |
| தம்பிலுவில் | - | 10 |
| தம்பட்டை | - | 05 |
| அட்டாளைச்சேனை | - | 05 |
| பாலமுனை | - | 07 |
| ஒலுவில் | - | 10 |
| நிந்தவூர் | - | 19 |
| இறக்காமம் | - | 17 |
| காரைதீவு | - | 23 |
| சாய்ந்தமருது | - | 25 |
| சம்மாந்துறை | - | 27 |
| கல்முனை | - | 27 |
| பெரிய நீலாவணை | - | 30 |

(தகவலுக்காக) (ஆ+ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கதியைத் தேடிவந்த கவித்துளிகள்....

**ஏமாற்றம்**

வானுள்ளவரை காற்றுள்ளவரை.....
உயிருள்ள வரை
உறவாய் நிற்பேன் என்றவனே...
சீதனம் இல்லை என்றவுடன்
சென்று விட்டாயே எனை மறந்து....!
ஏமாற்றி விட்டாயே படுபாவி! - புதுமைக்கலா -

**சீர்வரிசை**

திருமணங்கள் சொர்க்கத்தில்...
நிச்சயிக்கப்படுவது அந்தக்காலம்
சீர்வரிசை கொடுத்து நிச்சயிப்பது....
இந்தக்காலம்! - புதுமைக்கலா -

**முகவரி**

முகம் இல்லாத எனக்கு முகவரி தந்து அறிமுகமாகி....
என் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து !
என் கற்பனைகளுக்கு விருந்து கொடுத்து
என் மனதைக் குளிர வைத்து....
மற்றவரை வியக்க வைத்து
எனக்குள் பூகம்பமாய் வெடிக்கிறது...
என் உணர்வு எனும் கவிதை...! - புதுமைக்கலா -

**தேடல்**


தேடுகிறேன் என்னை எனக்குள்ளே....
தேடுகிறேன் ஏதோ ஒன்றை இழந்துவிட்ட
உணர்வுகளுடன் தேடுகிறேன்....
என்னை மீட்க எனக்கு முடியவில்லை
அறிமுகமில்லாத மேடையின்...
முன் நின்று எனை தேடுகிறேன்.
முகமில்லாத எனக்கு முகவரி எதற்கு
என் கவிதை எனை காட்டிக்கொடுக்காதா
என்ற நப்பாசையுடன் தேடுகிறேன்....! - புதுமைக்கலா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Let us Sing Little Songs.

*Mother , Mother*
*Tell my father*
*I want a Computer*
*To be a learner*
**



*Love is God*
*Light is God*
*Peace is God*
*Hope is God*
*Joy is God*
*Soul is God*
*All makes me (kid)*
***



**UNO, UNO**
**Close the volcano**
**Palestine, Afghanistan**
**Kosovo and many more**
**Children are eying**
**with so horror**
***

**Human Values**
**Human rights**
**Protect these**
**To make our future**
**Beautiful and bright**
***

For Day care Center / Pre - School

*By.Debajit Bhuyan*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்மா சக்திக்கு சுயதொழில் கடனுதவி

அம்பாரை மாவட்டத்தில் அடங்கும் இறக்காம D.S. பிரதேசத்தில் – சிங்கபுர என்னும் கிராமத்தில் இயங்கும் "சம்மாசக்தி" என்னும் பெயரால் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக ஒரு அரசசார்பற்ற குழுமம் இயங்கி வருகின்றது.

இந்த "சம்மாசக்தி" அமைப்பானது சிங்கபுர கிராமத்திலும் அதை அண்டிய வட்டாரங்களிலுள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற ஏழைமக்களை பயனாளிகளாக அங்கத்தவர்களாகக் கொண்டு ஏழு பேர் கொண்ட முகாமைக்குழுவின் கீழ் இயங்கி வருகின்றது.

இந்த அமைப்பில் முஸ்லிம், சிங்கள மக்களிலிருந்து 80 குடும்பங்கள் இணைந்து செயல்படுகின்றார்கள். அக்கரைப்பற்றில் இயங்கும் மகாசக்தி நிறுவனத்தின் வழிகாட்டலில் உருவாகிய இவ்வமைப்பானது தனித்தியங்கும் சக்தியாக வளர்ச்சியடைந்து வருகின்றது.

மனிதநேய அமைப்பின் (CHA) அனுசரணையோடு சமாதானமும் + அபிவிருத்தியும் என்ற தொனிப்பொருளில் இவ்வமைப்பு மூன்றாவது கட்ட வேலைத்திட்டத்தை இக் கிராமத்தில் இரு இனங்கள் மத்தியில் அமுல் நடத்தி வருகின்றது.

நலிவுற்ற 42 குடும்பங்களின் சுயதொழில் முயற்சிக்காக தலா 5000/- ரூபா நிதி அண்மையில், 'மகாசக்தி' காரியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இதற்காக பயனாளிகள் மத்தியில் அறிவூட்டல் நிகழ்ச்சிகளும் நடைபெற்றுள்ளன.

42 குடும்பங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு சுயதொழிற்கடன் வழங்கப்படும் நிகழ்வில் CHA அமைப்பின் அம்பாரை மாவட்ட அதிகாரி, திரு. ராஜாமணி அவர்கள் 'மகாசக்தி' அமைப்பின் இணைப்பாளர் அசோகா ஆறுமுகம், விகாராதிபதி சத்தானந்த தேரர் 'மகாசக்தி' நிருவாகிகள் கலந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரவாயில்லை.....!

குடிவெறியில் 'ரகளை' பண்ணும்
குடியர்களும் பரவாயில்லை....!
படையெடுத்து போர் செய்யும்
ஆமிகளும் பராவாயில்லை....!
உயிர் மாய்த்து மானம் காக்கும்
'சைனட்டும்' பரவாயில்லை....!
உயிர் போகத் தூக்கிலிடும்
'அலுகோசும்' பரவாயில்லை...!
காப்பாற்ற முன்வராத
சுவாமிகளும் பரவாயில்லை...!
சுனாமி எனும் பேரலையே
சொல்லாமல் வாய்பிளந்து...
உயிர்களையே குடித்தாயே!
உடமைகளை அழித்தாயே!
உறவுகளைப் பறித்தாயே!
'சுனாமி' அனர்த்தமதன்
கோரம்... கொடியது என்பேன்!
சுவாமிகளும் - மாமிகளும்
ஆமிகளும் - மனிதர்களே!
ஆகையினால் - பரவாயில்லை...!
சுனாமிப் பேரலையே!
மானிடத்தை....
ஒருபோதும் உன்னிடம் நான்
எதிர்பார்க்கமாட்டேன்...
உயிரற்ற உன்னிடத்தில்
இரக்கத்தைக் காண்பேனா?
ஆகையால் உன் கொடிய
செயலை ஒருபோதும்
மன்னிக்கமாட்டேன், போ!

●●●

~ மணிக்கவிராயர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் முக்கியங்கள்

**அறிவை வளர்க்கும் அறிவியல் துளிகள்........**

1. இலங்கை சுதந்திரம் பெற்ற ஆண்டு
   ❖ 1948ம் ஆண்டு பெப்ரவரி 04

2. இலங்கையை ஆட்சி செய்த வெளிநாட்டவர்கள்:
   ❖ போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர்.

3. இலங்கையில் நிலக்கரி கிடைக்கும் இடம்:
   ❖ முத்துராஜவெல

4. இலங்கையின் கரும்பு விளையும் இடம்
   ❖ கந்தளாய்

5. இலங்கையில் கூடிய மழை பெறும் இடம்:
   ❖ வட்டவளை, ஹற்றன்.

6. இலங்கையில் குறைந்த மழை பெறும் இடம்:
   ❖ மன்னார், அம்பாந்தோட்ட

7. இலங்கையின் வரலாற்று ஆதார நூல்
   ❖ மகாவம்சம்

8. இலங்கையின் ஆதிக்குடிகள் யாவர்
   ❖ இயக்கர், நாகர்

9. இலங்கையில் சுதந்திர வர்த்தக வலயம் உள்ள இடங்கள்
   ❖ கட்டுநாயக்கா, பியகம

10. இலங்கையின் தேசிய வங்கிகள்
    ❖ இலங்கை வங்கி, மக்கள் வங்கி

11. இலங்கையின் அதிக வெப்பம் மிகுந்த இடம்:
    ❖ அம்பாந்தோட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. இலங்கையில் அதிகளவு நெல் பயிரிடப்படும் இடம்
❖ குருநாகல்

13. இலங்கையில் யானைகளின் சரணாலயம் உள்ள இடம்
❖ பின்னவெல

14. இலங்கையில் பெருங்குளங்களை முதலிற் கட்டிய மன்னர்கள்
❖ வசபன், மகசேனன்

15. இலங்கையில் மிக உயரமான குன்று
❖ கொக்காகல

16. இலங்கையில் மிகப்பெரியகுளம் ஏரி
❖ சேனநாயக்கா சமுத்திரம்

17. இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை
❖ பாக்குநீரிணை

18. இலங்கையில் மக்கள் அதிகம் வாழும் மாவட்டம்
❖ கொழும்பு

19. இலங்கையில் மக்கள் அடர்த்தி குறைந்த மாவட்டம்
❖ மன்னார்

20. இலங்கையில் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் இடங்கள்.
❖ மட்டக்களப்பு, காலி, நீர்கொழும்பு, மன்னார்.

21. இலங்கை தேசியகொடி வாளேந்திய சிங்கக்கொடியாக்கப்பட்ட ஆண்டு 1950

22. இலங்கையின் பரப்பளவு
❖ 65, 610 சதுர கிலோமீற்றர்

23. இலங்கையின் தற்போதுள்ள நிருவாக மாவட்டங்கள்
❖ 25

24. இலங்கையின் தற்போதுள்ள தேர்தல் மாவட்டங்கள்
❖ 22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. இலங்கையின் இலவசக்கல்வி கொண்டுவரப்பட்ட ஆண்டு
   - ❖ 1945ம் ஆண்டு

26. இலங்கையின் இலவசப்பாடநூல் திட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு
   - ❖ 1980ம் ஆண்டு

27. இலங்கையில் தெங்கு முக்கோணவலய மாவட்டங்கள்
   - ❖ குருநாகல், சிலாபம், கொழும்பு

28. இலங்கையில் இப்போது வேடர்கள் வசிக்கின்ற இடங்கள்
   - ❖ தாம்பான, வட்டவளை, கல்போறுயாய, சொரபொரவெவ

29. இலங்கை பால்மா இறக்குமதி செய்யும் நாடுகள்
   - ❖ நெதர்லாந்து, நியுசிலாந்து

30. இலங்கை அரிசி இறக்குமதி செய்யும் நாடுகள்
   - ❖ பர்மா, இந்தியா, ஜப்பான்

31. இலங்கையில் மட்பாண்டத் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்
   - ❖ பிலியந்தலை

32. இலங்கையில் புகையிரத சேவையை ஆரம்பித்த ஐரோப்பிய இனத்தவர்
   - ❖ ஆங்கிலேயர்

33. இலங்கையின் பிரதமரின் வாசஸ்தலம்
   - ❖ அலறிமாளிகை

34. இலங்கையின் ஜனாதிபதி வாசஸ்தலம்
   - ❖ ஜனாதிபதி மாளிகை

35. இலங்கையில் தொல்பொருளியல் கலைத்துவ படைப்புக்கள் கொண்ட இடங்கள்
   - ❖ சீகிரியா, சிதுல்பல்வ, எம்பக்க தேவாலயம்

~ நன்றி மாணவர் கேசரி ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுத்தடுத்த 'சங்கதி'களில்......

இந்த மகான்களைப்பற்றி, மகோன்னத மனிதர்களைப்பற்றி, சரித்திர புருஷர்களைப் பற்றி தெரிந்து கொள்வோமா....? முடிந்தவரை – தெரிந்து வைப்பது அறிவுக்கு நல்லதல்லவா? ஆசிரியர்களின் – மாணவ – மாணவிகளின் – நூலாளர்களின் – அறிவாளர்களின் தேவைக்கு உகந்ததல்லவா....? சற்றுப் பொறுத்திருங்கள். அந்த மகான்களிலே – வரலாறு படைத்தவர்களிலே..... சிலர் இவர்கள்.....

→ வில்லியம் ஷேக்ஸ்பியர்
→ ஜோர்ஜ் பேணாட் ஹா
→ இயேசு கிறிஸ்து
→ இராம கிருஷ்ணர்
→ இளங்கோ அடிகள்
→ இராஜராஜ சோழன்
→ இராஜேந்திர சோழன்
→ ஜோர்ஜ் ஸ்ரீவன்சன்
→ ஷாஜஹான்
→ ஹிட்லர்
→ ஸ்டாலின்
→ ஜான்சிராணி
→ மகாத்மா காந்தி
→ அன்னை திரேசா
→ அறிஞர் அண்ணா
→ ஜாகிர் ஹூசைன்
→ அப்துல் கலாம்......

இந்த வரிசையில் இன்னும் பலர் வருவார்கள்......

– ஆ + ர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாசக்தி வழங்கும் வாழ்வாதார கடனுதவிகள்

| மாதம் | தொ. இல | சுயதொழில் திட்டம் | பயன்பெறுநர் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை | மீளளிப்புக் காலம் | கிராமங்கள் |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| வைகாசி | 1 | சீ.க.வெ | 09 | 276000.00 | 25 மாதங்கள் | அ.பற்று.7/சின்னக்குளம்/ வாச்சிக்குடா |
| | 2 | கிடுகுவியாபாரம் | 01 | 57000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று. |
| | 3 | கோழி வளர்ப்பு | 08 | 198000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று. 7, 9 |
| | 4 | பசு வளர்ப்பு | 03 | 120000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று. 9, ஆலையடிவேம்பு |
| | 5 | விவசாய உள்ளீடுகள் | 01 | 100000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று. 9, |
| | 6 | சாப்பாடு கட்டுதல் | 01 | 22000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று. 7, |
| | 7 | தச்சுத்தொழில் | 02 | 77000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று. 7, கோளாவில் 3 |
| | 8 | சிறுகடை | 03 | 77000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று. 8, கோளாவில் 3 |
| | 9 | நெல் குற்றல் | 03 | 77000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று. 8, கோளாவில் 3 |
| | 10 | மேசன் வேலை | 01 | 12000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று. 8 |
| | 11 | தையல் | 02 | 10200.00 | 25 மாதங்கள் | கோளாவில் 1, 2 |
| | 12 | கிணற்றுக்குழாய்கள் | 02 | 100000.00 | 25 மாதங்கள் | நாவற்காடு |
| | 13 | மலகூடம் | 01 | 20000.00 | 25 மாதங்கள் | சின்னக்குளம் |
| | 14 | ஆடைத்தொழில் | 01 | 40000.00 | 25 மாதங்கள் | மருத்துவர் வீதி, அ.பற்று. |
| | | **மொத்தம்** | **38** | **1278000.00** | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாசக்தி வழங்கிய வாழ்வாதாரக் கடனுதவிகள்

**ஜூன் 2007**

| மாதம் | தொ. இல | சுயதொழில் திட்டம் | பயன்பெறுநர் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை | மீளளிப்புக் காலம் | கிராமங்கள் |
|---|---|---|---|---|---|---|
| ஆனி | 1 | தையல் | 02 | 90000.00 | 25 மாதங்கள் | அ.பற்று.7/வாச்சிக்குடா |
| | 2 | கோழிவளர்ப்பு | 06 | 150000.00 | 25 மாதங்கள் | தீவுக்காலை, கோளாவில், வாச்சிக்குடா |
| | 3 | சீ.க.வெ. | 03 | 85000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று. 7, வாச்சிக்குடா, சின்னக்குளம் |
| | 4 | நெல் குற்றல் | 01 | 30000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று. 07 |
| | 5 | சிறுகடை | 01 | 22000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று. 7, கோளாவில் 3 தீவுக்காலை |
| | 6 | வீடு கட்டுவது | 01 | 67000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று. 7 |
| | 7 | தச்சுத்தொழில் | 01 | 30000.00 | 25 மாதங்கள் | ஆலையடிவேம்பு |
| | 8 | பயிர்ச்செய்கை | 01 | 12000.00 | 25 மாதங்கள் | தீவுக்காலை |
| | 9 | தளபாட செய்கை | 01 | 37000.00 | 25 மாதங்கள் | வாச்சிக்குடா |
| | 10 | பசுவளர்ப்பு | 02 | 102000.00 | 25 மாதங்கள் | ஆலையடிவேம்பு |
| | | **மொத்தம்** | **21** | **1278000.00** | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| மாதம் | தொ. இல | சுயதொழில் திட்டம் | பயன்பெறுநர் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை | மீளளிப்புக் காலம் | கிராமங்கள் |
|---|---|---|---|---|---|---|
| ஆடி | 1 | கோழிவளர்ப்பு | 11 | 370000.00 | 25 மாதங்கள் | அ.பற்று.7/வாச்சிக்குடா/கோளாவில், நாவற்காடு |
| | 2 | இரும்புத்தொழில் | 02 | 69000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று. |
| | 3 | சிகையலங்காரம் | 02 | 69000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று. 9 |
| | 4 | ஆடு வளர்ப்பு | 01 | 15000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று. 7 |
| | 5 | சிறுகடை | 05 | 212000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று. 7,8 ஆலையடிவேம்பு |
| | 6 | சீ.க. வெட்டுவது | 02 | 47000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று. 7, நாவற்காடு |
| | 7 | தையல் | 02 | 43000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று. 8 |
| | 8 | பயிர்ச்செய்கை | 03 | 72000.00 | 25 மாதங்கள் | கோளாவில், தீவுக்காலை |
| | 9 | சிற்றுண்டிச்சாலை | 01 | 22000.00 | 25 மாதங்கள் | கோளாவில் – 03 |
| | 10 | மீன்பிடி | 01 | 60000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று – 08 |
| | 11 | து.ச.வ.உ.பா | 01 | 35000.00 | 25 மாதங்கள் | நாவற்காடு |
| | 12 | வைத்தியச்செலவு | 01 | 85000.00 | 25 மாதங்கள் | ஆலையடிவேம்பு |
| | 13 | பசுவளர்ப்பு | 01 | 62000.00 | 25 மாதங்கள் | ஆலையடிவேம்பு |
| | 14 | திருமணம் | 01 | 22000.00 | 25 மாதங்கள் | கோளாவில் – 3 |
| | | மொத்தம் | **36** | **1183000.00** | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாசக்தி வழங்கிய வாழ்வாதாரக் கடனுதவிகள்

**ஆகஸ்ட் 2007**

| மாதம் | தொ. இல | சுயதொழில் திட்டம் | பயன்பெறுநர் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை | மீளளிப்புக் காலம் | கிராமங்கள் |
|---|---|---|---|---|---|---|
| ஆவணி | 1 | தையல் | 03 | 117000.00 | 25 மாதங்கள் | அ.பற்று.7/கோளாவில் |
| | 2 | கோழிவளர்ப்பு | 07 | 216000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று. வாச்சிக்குடா, ஆலையடிவேம்பு |
| | 3 | தச்சுத்தொழில் | 01 | 75000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று. 09 |
| | 4 | சிறுகடை | 01 | 35000.00 | 25 மாதங்கள் | வாச்சிக்குடா |
| | 5 | சீ.க. வெட்டுவது | 02 | 77000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று - 7, 8 |
| | 6 | தும்பி மிட்டாய் வியாபாரம் | 01 | 30000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று. 8 |
| | 7 | பயிர்ச்செய்கை | 02 | 70000.00 | 25 மாதங்கள் | தீவுக்காலை |
| | 8 | மலகூடம் | 01 | 30000.00 | 25 மாதங்கள் | சின்னக்குளம், அக்கரைப்பற்று - 7 |
| | 9 | திருமணம் | 01 | 50000.00 | 25 மாதங்கள் | வாச்சிக்குடா |
| | 10 | மேசன்வேலை | 01 | 32000.00 | 25 மாதங்கள் | அக்கரைப்பற்று - 07 |
| | | **மொத்தம்** | **20** | **732000.00** | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த 04 மாதங்களில் மகாசக்தி வழங்கிய வாழ்வாதாரக் கடனுதவிகளின் மொத்தத் தொகை

### சாராம்சம்

| மாதம் / ஆண்டு | பயன்பெறுநர் | கடன்தொகை |
|---|---|---|
| வைகாசி - 2007 | 38 | 1278000.00 |
| ஆனி - 2007 | 21 | 714000.00 |
| ஆடி - 2007 | 36 | 1183000.00 |
| ஆவணி - 2007 | 20 | 732000.00 |
| 4 மாதங்களில் மொத்தம் | 115 | 31,75,000.00 |

தொகுப்பு: வை. நேசமணி,
(கடன் பிரிவு) மகாசக்தி

### தெரியுமா?

## அலுவலகம் ஆறு நோக்கங்களைக் கொண்டவை

### அவையாவன



- தகவல்களை ஏற்றுக் கொள்ளல் *(Receiving Information)*
- தகவல்களை பதிவு செய்தல் *(Registering Information)*
- தகவல்களை வழங்குதல் *(Giving Information)*



- சொத்துக்களைப் பாதுகாத்தல் *(Safe guarding Assets)*
- பயனாளிகளின் தேவைகளைப் திருப்தி செய்தல் *(Satisfying customer's needs)*

தொகுப்பு: கே. ஆறுமுகம் அசோகா
இணைப்பாளர், மகாசக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடுத்தடுத்த சங்கதிகளில்**
**இவை பற்றிய சுருக்கங்கள்**

☞ ஈராக்
☞ ஈரான்
☞ இஸ்ரவேல்
☞ ஹிரோஷிமா
☞ உலகம்
☞ முதலாவது உலக யுத்தம்
☞ இரண்டாவது உலக யுத்தம்
☞ உலக அதிசயம் ஏழு
☞ எத்தியோப்பியா
☞ இமயமலை
☞ இரவும் - பகலும்
☞ எவரெஸட்
☞ ஐக்கிய நாடுகள்
☞ ஒலிம்பிக் ஆட்டங்கள்
☞ உடற்பயிற்சி
☞ இன்சூரன்ஸ்
☞ இன்சுலின்
☞ உப்பு
☞ உருளைக்கிழங்கு
☞ ஈ

இந்த வரிசையில்.... இன்னும் நீளும்.........

- ஆ + ர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"ஸ்ரீமான்" பேசுகிறார்...

வணக்கம்!

மகாஜனங்களே! சென்ற 'சங்கதி' மணிமேடையிலே பேசியதை விட சற்று வித்தியாசமாக இன்று பேசலாம் என நினைக்கின்றேன்.

எப்படித்தான் எழுதி எத்தனை தத்துவங்களை முழங்கினாலும் தமிழ் மக்களை உசுப்ப முடியவில்லை. அவர்களது மனங்கள் இப்போது மரத்துப் போய்விட்டன. எவர் எதைச் சொன்னாலும் நம்பப் போவதில்லை. ஏனென்றால் அவர்கள் படுமோசமாக ஏமாற்றப் பட்டிருக்கிறார்கள். நம்பி மோசம் போயிருக்கிறார்கள். வந்தாரை வாழ வைத்துப்பழகிய தமிழினமும் தமிழர்களும் ஏமாளிகளாக கோமாளிகளாக மாறியிருக்கிறார்கள், இல்லை. மாற்றப் பட்டிருக்கிறார்கள். தொன்று தொட்டு, நம்பிக்கை ஒன்றையே தம் வாழ்க்கையில் உறுதியாக வைத்து அரசியலில், கல்வியில், பொருளியலில், சமூகவியலில் நிபுணத்துவக் கலைகளில் காலூன்றி முன்னேறியிருந்த தமிழ் மக்கள், கடந்த நான்கு தசாப்த காலத்துள் எல்லாவற்றையுமே இழந்து நிற்கின்றார்கள். 'நம்பிக்கெட்டுப்போன தமிழினம்' என்று எதிர்காலம் எழுதி வைத்துக்கொள்ளப் போவதோடு, சந்ததி சந்ததியாக இந்த 'கேவலத்தை' விட்டுச்செல்லப் போகிறது. 'கூடவே இருந்து குழிபறிக்கும்' குணங்கொண்டோரை கும்பல்களை தோழர்களை சாதாரணமாக நாம் நமது இந்த சிறிய வாழ்க்கையிலே பார்த்திருக்கிறோம் அல்லவா?

இதுபோல எமது நாட்டை ஆள வந்த அரசுகளில் எமது இனத்தின் பேரால் நமது முன்னோர்கள் மட்டுமல்ல, இன்றையத் தலைமுறை கூட, வைத்த 'நம்பிக்கைகள்' என்னவாயிற்று? வரலாறுகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


புரட்டினால் ஏமாற்றப்பட்ட வஞ்சிக்கப்பட்ட பக்கங்களை நிறையவே தரிசிக்க முடியும். இது பொய்யல்ல. முற்றிலும் நிஜம்! உண்மை! 'நம்பிக்கைத் துரோகம் அடிக்கடி தொடர்ச்சியாக காலங்காலமாக ஓரினத்தின் மீது மற்றோர் இனம் ஒரு சமூகத்தின் மீது மற்றோர் சமூகம் செய்வதால் விளைவு....?

'தலை நிமிர்ந்து நின்ற தமிழன்' இன்று தலை கவிழ்ந்து நிற்கின்றான் ஏன்? ஏமாற்றப்படுவதனால் நம்பிக்கைத் துரோகிகளுக்கு முகம் கொடுப்பதனால் 'நம்பிக்கை' மீதே நம்பிக்கையற்று, விரக்தியின் விழிம்பிலே நிற்கிறான். ஏமாற்றப்பட்ட வரலாறுகள், சம்பவங்கள், நிகழ்ச்சிகளை தமிழினம் மறக்க முடியாதபடி வெட்கித் தலை கவிழ்ந்த படி இருக்கிறது. இதற்கு ஒருவிடிவு வராதா? முடிவு கிடைக்காதா? என்று ஒவ்வொரு தமிழனும் ஏங்குகிறான். இறைவனைப் பிரார்த்தித்தபடி இருக்கிறான். மனிதர்கள் மீது தமிழன் வைத்த நம்பிக்கை தோற்றுப் போனாலும் வீண் போனாலும் இறைவன் மீது அவன் வைத்த நம்பிக்கை தோற்றுப் போகுமா? வீண் போகுமா?

பொறுத்துத்தான் பார்க்க வேண்டும்! இறைவா! அது உன் கையிலல்லவா இருக்கிறது? நன்றி வணக்கம்!

அடுத்த................ மேடையில்.....................நம்பிக்கையுடன் வருவேன்


- வணக்கம் -





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வின் நிழல்கள்....




அம்பாறை மாவட்டத்தில் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் மேசிக் கொப் (MC) சர்வதேச நிறுவனமும் அண்மையில் மகாசக்தி நிறுவனமும் இணைந்து செயல்பட ஓர் ஒப்பந்தம் கைச்சாதிடப்பட்டது. MC நிறுவன அதிகாரி திரு. எலிஜா அவர்களும் – மகாசக்தி நிறுவன அதிகாரி திரு. மணிவாசகன் அவர்களும் கைச்சாத்திட்ட பின் கைலாகு கொடுக்கின்றார்கள்.




மகாசக்தியை ஒரு பங்காளி அமைப்பாக இணைத்து செயல்படுமுன் – அதனை ஆய்வு செய்வதற்கு மேசிக் கொப் (MC) அதிகாரிகள் (ரஞ்சித், எலிஜா, சியாஸ் சுப்பும்) மகாசக்தி பணிமனைக்கு வருகைதந்தபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மகாசக்தி கூட்டுறவு மண்டபத்திலே நடைபெற்ற 85வது சர்வதேச கூட்டுறவு
தின விழாவிலே கூட்டுறவு உதவி ஆணையாளர் ஜனாப். ஐ.எல்.ஏ. ரபாய்தீன் அவர்கள்.




மகாசக்தி கூட்டுறவு மண்டபத்திலே நடைபெற்ற 85வது சர்வதேச கூட்டுறவு
தின விழாவிலே ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் திரு. எஸ். கரன் அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மகாசக்தி கூட்டுறவு மண்டபத்திலே நடைபெற்ற 85வது சர்வதேச கூட்டுறவு
தின விழாவிலே கூட்டுறவு உதவி கல்விப் பணிப்பாளர் திரு. வி. குணாளன் அவர்கள்.



மகாசக்தி கூட்டுறவு மண்டபத்திலே நடைபெற்ற 85வது சர்வதேச கூட்டுறவு
தின விழாவில் வரவேற்புரைக்கீதம் பாடும் யுவதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகாசக்தி கூட்டுறவு மண்டபத்திலே நடைபெற்ற 85வது சர்வதேச கூட்டுறவு
தின விழாக்காட்சிகள்





மகாசக்தி கூட்டுறவு மண்டபத்திலே நடைபெற்ற 85வது சர்வதேச கூட்டுறவு
தின விழாக்காட்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





டயக்கோணியா நிறுவனத்தின் அனுசரணையில் மகாசக்தியின் ஏற்பாட்டில் சமாதானத்தை ஒட்டிய ஸ்ரிக்கர்களை மூத்த சமூக சேவகி ஒருவரிடம் மகாசக்தி தலைவர் வழங்கும் போது




இறக்காமம் DS பிரதேசத்திலுள்ள சிங்கபுர கிராமத்தில் இயங்கும் சம்மாசக்தி நிறுவனத்தின் அங்கத்தவர்களுக்கு மனிதநேய அமைப்பின் சமாதனமும் அபிவிருத்தியும் திட்டத்தின் கீழ் மகாசக்தி அமைப்பு வாழ்வாதாரம் வழங்கும் நிகழ்வில் மகாசக்தி உப தலைவியும், நிருவாக அதிகாரியுமான துளசிமணி ஜே.பி. உரையாற்றுகிறார். சிங்கபுர விகாராதிபதி சத்தானந்ததேரர் இணைப்பாளர் அசோகா ஆறுமுகம் காணப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யுத்தம் காரணமாக படுவான்கரையிலிருந்து அகதிகளாக வெளியேறி களுவாஞ்சிக்குடி பிரதேசத்திலுள்ள மாங்காடு கிராமத்தில் தங்கியிருந்த அகதிகளுக்காக நிவாரணப் பொருட்களை மகாசக்தி நிவாரணக்குழு வழங்க ஆயத்தமான போது




யுத்தம் காரணமாக படுவான்கரையிலிருந்து அகதிகளாக வெளியேறி களுவாஞ்சிக்குடி பிரதேசத்திலுள்ள மாங்காடு கிராமத்தில் தங்கியிருந்த அகதிகளுக்காக நிவாரணப் பொருட்களை எடுத்துச் சென்று மகாசக்தி நிவாரணக்குழு வழங்கியபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கோளாவில் கிராமத்து படித்த இளைஞர்களின் தொடர்கல்வி வளர்ச்சிக்காக மகாசக்தி நிதியுதவி வழங்கிய போது.



மகாசக்தி அமைப்பால் ஏற்பாடு செய்த எச்.ஐ.வி / எயிட்ஸ் (HIV/AIDS) விழிப்புணர்வுச் செயலமர்வில் வளதாரியாகக் கலந்துகொண்ட டாக்டர் ஹரீஸ் அவர்களை வரவேற்று நிறுவனத் தலைவர் என். மணிவாசகன் பேசும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடா டொரண்டோ நகரில் வாழும் முதுபெரும் எழுத்தாளர் ஈழத்துப்பூராடன் எழுதிய அமரர் பண்டிதர் பூபாலப்பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய நூலை கவிஞரும் சமாதான நீதவானுமாகிய என். மணிவாசகன் அவர்கள், சைவப்புலவர் திரு. எஸ். சாமித்தம்பி அவர்களுக்கு வழங்கும் போது





மகாசக்தி இணைப்பு பணியகமொன்றில் அதன் இணைப்பாளர் திருமதி. அ. ஷயந்தினி கடமையில் இருக்கும் போது மகாசக்தி அதிகாரியும் நிதியுதவியாளரும் பார்வையிடும் காட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்காமம் DS பிரிவிலடங்கும் 'சம்மாசக்தி' நிறுவனத்தின் (மகாசக்தி பங்காளி) நிருவாகக் குழுவினருக்கு கணக்கு வைப்புமுறை தொடர்பாக செயலமர்வு மகாசக்தியின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இச் செயலமர்வு வளதாரி ஜனாப். நஹீம் அகமட் நெறிப்படுத்துவதையும் இணைப்பாளர் அசோகா கவனிப்பதையும் காணலாம்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாசக்தி நிறுவனத்தால் கண்ணகி கிராமத்தில் நடாத்தப்படும் பாலர் பாடசாலை ஒன்றில் பாலர்களும் ஆசிரியைகளும் காணப்படும் காட்சி.






கோளாவில் மகாசக்தி பாலர் பாடசாலையின் ஆசிரியைகளும் பாலர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஜனோதயா' நிறுவனத்தைச் சேர்ந்த வளதாரி திரு. கிறெய்ஷன் சம்மாசக்தி உறுப்பினர்களுக்கு "PRA" தொடர்பான செயலமர்வொன்றை சிங்கபுர 'சம்மாசக்தி' பணிமனையில் நெறிப்படுத்துவதைப் படத்தில் காணலாம்.



## சமாதானம் உருவாக....!

- இதயத்தில் பெருந்தன்மை இருந்தால், அது நற்பண்புகளின் அழகாகப் பிரகாசிக்கும்.
- நற்பண்புகளில் அழகு இருந்தால், இது இல்லத்தில் இணக்கமுடன் வாழத் தூண்டும்.
- இல்லத்தில் இணக்கமுடன் வாழ்ந்தால், அது தாய் நாட்டில் சட்டத்தை மதிக்க தூண்டும்.
- தாய் நாட்டில் சட்டத்தை மதிப்பவர்களால் உலகம் முழுவதும் சமாதானத்தை உருவாக்க முடியும்.

– சீனத்துக்கருவூலம் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
பதிவு இல:
AM/CC/46
02- 10- 1948

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Donated by

diakonia

PEOPLE CHANGING THE WORLD

Mahasakthi foundation

மகாசக்தி நிறுவனம்

මහාසක්ති පදනම

e-mail: mahasakthi@eureka.lk
T.P: 067-2277696, Fax: 067-2277696
Sagama Road, Akkaraipattu - Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org